விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/=

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 249 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 08 சனிக்கிழமை (24.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பிரசாரச் செலவை உறுதிப்படுத்தாவிடின் குடியுரிமை இரத்து

7 ஆம் பக்கம் பார்க்க

யாழில் கடுங்காற்று

## 20 குடும்பம் பாதிப்பு உடைமைகளும் சேதம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த இரண்டு 02

## தேர்தல் கண்காணிப்பு பணியில் களமிறங்கும் 12 நாடுகள்

7 ஆம் பக்கம் பார்க்க

## சம்பள அதிகரிப்பு மற்றும் மானியம் தேர்தல் காலத்தில் வழுங்கத் தடை

### தேர்தல்கள் ஆணைக்குழு திட்டவட்டம்

(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரே அனைத்துச் சம்பள அதிகரிப்பு மற்றும் மானியங் களை நடைமுறைப்படுத்த முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.
இது குறித்து உரிய நிறு வனங்களுக்கு அறிவிக்கப் படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதித் தேர் 02

நீதிமன்றம் உத்தரவு

## வவுனியாவில் இறந்த சிசு யாழ்.போதனாவில் ஒப்படைப்பு

(வவுனியா)
வவுனியா வைத்தியசாலை யில் இறந்த சிசுவின் உடல் மருத்துவப்பரிசோதனைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக் குக் கொண்டு செல்லப்பட்ட தாக சிரேஷ்ட சட்டத்தரணி தி.திருவருள் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,
வவுனியா வைத் தியசாலையில் 15

‘நமக்காக நாம்’

## பிரசாரக் களத்தில் அரியநேந்திரன்

(யாழ்ப்பாணம்)
ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் போட்டியிடும் பொது வேட்பாளருக்கு ஆதரவாக “நமக்காக நாம்” என்ற தொனிப்பொரு ளில் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் 15

தமிழ்ப் பொது வேட்பாளர்

## சிறீதரன் ஆதரவு
## சுமந்திரன் எதிர்ப்பு

### தள்ளாடுகிறது தமிழரசுக் கட்சி



(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேந்திரனை ஆதரிப்பது தொடர் பில் இலங்கை தமிழரசுக் கட்சி தீர்க்கமான முடிவை எட்ட முடி யாமல் திண்டாடுவதாகத் தெரி விக்கப்படுகிறது.

(02ஆம் பக்கம் பார்க்க)



## கட்டடத் தொழிலாளி சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் கட்டட வேலையில் ஈடுபட்டு வந்த தொழிலாளர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கட்டடத்தின் இரண்டாம் மாடியில் நேற்று முன் தினம் இரவு இருவர் வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்த நிலையில் ஒருவர் 15

## யுக்தியவை கைவிடுங்கள் கைதானோரை விடுவியுங்கள்

### அரசுக்கு ஐ.நா பரிந்துரை

(கொழும்பு)
யுக்திய நடவடிக்கையின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனை வரையும் விடுதலை செய்யு மாறு இலங்கை அரசாங்கத் திற்கு ஐக்கிய நாடுகள் சபை மீண்டும் பரிந்துரை செய்துள் ளது.
ஐ.நா உயர்ஸ்தானிகர் வோல்கர் டர்க் வெளி யிட்ட இலங்கையின் 15

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு சுன்னாகத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் நேற்று குடும்பஸ்தர் ஒருவரது சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக் காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட் டுள்ளது.
சுன்னாகம் - சூளானைப் பகுதியைச் சேர்ந்த தங்கவேலு கோபிநாத் (வயது-53) என்ப வரே இவ்வாறு சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.
இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,
சுன்னாகம் - 02

## கலந்துரையாடலுக்கு வாருங்கள் அரியநேந்திரனை அழைக்கிறார் ரணில்



(கொழும்பு)
ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித் துள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் சார்பில் களமிறக்கப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேந்திரனை கலந்து ரையாடலுக்கு வருமாறு ஜனாதி 16



ஜனாதிபதித் தேர்தல்

## இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் சொத்து விபரம் வெளியீடு

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் சொத்து விபரங்கள் இலஞ்ச ஊழல் மற்றும் சொத்துக்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவி னால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.
அதன் பிரகாரம், ஜனாதிபதித் தேர் தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் அதிக மாத 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

### மண்டைதீவு வழிப்பிள்ளையார்
## பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

(மண்டைதீவு)

மண்டைதீவு வழிப்பிள்ளையார் ஆலய பொதுச் சபைக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆலய முன்றலில் வே.ஞானோதரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில் ஊர் மக்களைக் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாக சபை கேட்டுள்ளது. (ந-7)

## சம்பள...

தலுக்கு முன்னதாக, அரசாங்கம் தற்போது சம்பள அதிகரிப்பு, விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கான மானியங்களை அறிவித்துள்ளது.

இது குறித்து பெஃப்ரல் உள்ளிட்ட அமைப்புகள் குற்றம் சாட்டியிருந்த நிலையில்,

திடீரென எடுக்கப்பட்ட இவ்வாறான தீர்மானங்களை ஜனாதிபதி தேர்தல் முடியும் வரை அமுல்படுத்த இடமளிக்கப்படமாட்டாது எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

மேலும் அரசாங்கம் முன்மொழிவுகளைக் கொண்டு வரலாம். எவ்வாறாயினும், செப்ரெம்பர் 21 வரை அதைச் செய்ய வேண்டாம் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

தேர்தல் அறிவிப்பதற்கு முன்னர் திட்டமிடப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.

இந்த திட்டங்களை நிறுத்த வேண்டாம் என நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம். ஆனால் அவற்றை ஒரு மாதம் தாமதப்படுத்த வேண்டும் என்றார். (ந-7)

## சிறீதரன்...

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதென தமிழ்ப்பொதுக் கட்டமைப்பு தீர்மானித்திருந்தது.

அதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேந்திரனை பொது வேட்பாளராக பொதுக் கட்டமைப்பு அறிவித்திருந்தது.

தமிழ்க் கட்சிகளும் தமிழ் சிவில் அமைப்புகளும் கூடி பொது வேட்பாளரைத் தெரிவு செய்திருந்த போதிலும் இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பங்கேற்காமல் தவிர்த்து வந்தது.

இந்நிலையில், தமிழ் மக்களின் இன்றைய நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது அவசியமென தமிழ் அரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கருத்து வெளியிட்டிருந்தார்.

தவிர, நேற்று முன்தினம் (22) பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனை தமிழ்ப்பொது வேட்பாளர் அரியநேந்திரன் அவரின் வீட்டிற்குச் சென்று சந்தித்தார்.

இதன்போது பொது வேட்பாளர் அரியநேந்திரனுக்கு தனது ஆதரவு என்றும் தனது கட்சி எந்த முடிவை எடுத்தாலும் தனது நிலைப்பாட்டில் இருந்து விலகப்போவதில்லை என்றும் சிறீதரன் கூறியிருந்தார்.

இதேவேளை தமிழ்ப் பொது வேட்பாளரை இலங்கைத் தமிழரசுக்கட்சி ஆதரிக்கமாட்டாது என்றும் தமிழரசுக் கட்சி எந்த வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு கூறுகிறதோ அந்த வேட்பாளருக்கே தமிழ் மக்கள் வாக்களிப்பர் என்றும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

இவ்வாறு தமிழரசுக் கட்சிக்குள் சிறீதரனும் சுமந்திரனும் வேறுபட்ட கருத்து நிலையில் இருப்பது அக் கட்சிக்குள் சிக்கலை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ந-7)

## குடும்பஸ்தர்...

சூளானைப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் திருவிழா இடம்பெற்று வரும் நிலையில் குறித்த நபர் பிரசாதம் தயாரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

ஆலயத்திற்கு அருகில் உள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் குடும்பத்துடன் வவுனியாவில் வசித்து வருகிறார். அவர்கள் திருவிழாவிற்காக ஊருக்கு வந்திருந்தார்கள்.

இவ்வாறு வவுனியாவில் இருந்து வந்த வீட்டின் உரிமையாளர் தனது வீட்டின் மோட்டார் இயங்கவில்லை எனக் கூறி, பிரசாதம் தயாரிப்பில் ஈடுபட்ட குறித்த நபரை அழைத்துச் சென்றுள்ளார்.

அங்கு சென்று பார்த்த குறித்த நபர் ரெஸ்டர் எடுத்து வருமாறு வீட்டின் உரிமையாளரிடம் கூறியுள்ளார்.

அவர் ரெஸ்டரை எடுத்துக்கொண்டு வந்த போது குறித்த நபர் கீழே விழுந்து உயிரிழந்த நிலையில் காணப்பட்டார்.

இந்நிலையில் அவரது சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இன்று மேற்கொள்ளவுள்ளார். (ந-7

## 20 குடும்பம்...

நாட்களாக ஏற்பட்ட கடும் காற்று காரணமாக 20 குடும்பங்களைச் சேர்ந்த 67 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தரவுகளின்படி 18 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதோடு பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் புலோலி நாகதம்பிரான் ஆலயமும் கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட உரும்பிராய் சைவத் தமிழ் பாடசாலையும் சேதமடைந்துள்ளன. (ந-7,30)


## நாகபூஷணி திருமண சேவை

**எம்மிடம் பல்லாயிரக்கணக்கில் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.** (1759)

**10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி , யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**


## மரண அறிவித்தல்



மண்ணில் 1948 - 07 - 23

விண்ணில் 2024 - 08 - 22

## கந்தசாமி செல்வரத்தினம்

அல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் புலோப்பளை பளையை வதிவிடமாகவும், கேணியடி கொக்குவில் மேற்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டகந்தசாமி செல்வரத்தினம் அவர்கள் 22.08.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சங்கரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி இளையதம்பி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் பாசமிகு மனைவியும் நிமலமோகன் (இத்தாலி), காலஞ்சென்ற நிமலநாதன், நிமலசோதி, நிமலதேவி, நிமலவதனி(சுவிஸ்), நிமலரஞ்சி(லண்டன்), நிமலச்செல்வி(நியூஸ்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் பேபி, மாணிக்கவாசகர், ஸ்ரீஸ்கந்தராசா, ஆனந்தராசா, ஸ்ரீதர், நிசாந் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, மல்லிகாதேவி, செல்வராணி மற்றும் பரிமளம் ஆகியோரின் சகோதரியும் செல்லம்மா, ராசம்மா, காலஞ்சென்றவர்களான செல்வராசா, கனகரத்தினம் மற்றும் தருமலிங்கம், தியாகராசா, இராசேந்திரம், வேலாயுதபிள்ளை, சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் நிருஷன், நிவேதன், லஜீவன், லக்ஷாயினி, வஜீகரன், நர்த்தனா, திவ்வியா, பேபிஷா, அக்ஷயா, வேனுஜா, விஸ்னுஜா, லானுஜா, அபிசா, திசாந் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (25.08.2024) நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரது புலோப்பளை இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோப்பளை பொற்பத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

புலோப்பளை, பளை. (C-1038) தகவல்: குடும்பத்தினர்


# பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள்

## கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email : kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை புறக்கணிக்கவில்லை: ஆனால் பொதுவேட்பாளருக்கு ஆதரவில்லை

## ஊடகவியலாளர் சந்திப்பில் சுமந்திரன்



(கொழும்பு)

**தமிழ் பொது வேட்பாளரை நாங்கள் ஆதரிக்க வில்லை. அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக் கையை முன்னெடுத்துள்ளோம். நாம் குறிப்பிடும் வேட்பாளருக்கே எம்மக்கள் வாக்களிப்பார்கள் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பின் போது ஊடக வியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக் கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது,

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு யாருக்கு ஆதரவளிக்கும் என்பதை இதுவரை தீர் மானிக்கவில்லை. அவசரப் பட வேண்டிய தேவை கிடையாது.

வாக்கெடுப்பு இடம்பெறு வதற்கு ஒருவாரத்துக்கு முன்னர் எமது தீர் மானத்தை அறிவிப்போம்.

ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு ஒரு தரப் பினர் குறிப்பிடுவதை தமிழ் மக்கள் ஏற்கப் போவதில்லை. இவர்கள் ஒவ்வொரு தேர்தல்களின் போதும் தேர்தலை பகிஷ் கரிக்குமாறு குறிப்பிட்டுக் கொள்வார்கள். ஆனால் மக்கள் தேர்தலை புறக்க ணிக்கவில்லை. இம் முறை யும் தேர்தலைப் புறக் கணிக்கப் போவதில்லை.

தமிழ் பொதுவேட்பாள ருக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. அவர் எங்களின் கட்சி உறுப்பினர், அவருக்கு எதிராக ஒழுக் காற்று நடடிக்கையை முன் னெடுத்துள்ளோம். இதனூ டாக எமது நிலைப்பாட்டை விளங்கிக் கொள்ள வேண் டும்.

கடந்த கால தேர்தல் களில் எமது நிலைப்பாட்டை இறுதித் தருணத்தில் அறிவித் திருந்தோம்.

அதற்கமைய 80 சத வீதமானோர் எமது தீர் மானத்துக்கு அமையவே வாக்களித்தார்கள். ஆகவே இம் முறையும் நாங்கள் குறிப்பிடும் வேட்பாளருக்கே எம் மக்கள் வாக்களிப்பார் கள் என்றார். (நி-6)

# தேர்தல் காலத்தில் மானியம் வழங்கும் அரசு

## எழுந்துள்ள குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் அறி விக்கப்பட்டுள்ள நிலையில் மக்களுக்கு அரசாங்கம் மானி யங்களை வழங்குவதை ஏற் றுக்கொள்ள முடியாது என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

குறித்த தகவலை பஃப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டி யாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக் கப்பட்டுள்ளதாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் மக்களின் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க மானியங்களை வழங்கு வது அவசியமானால் ஜனா திபதி தேர்தலின் பின்னர் அதனை நிறைவேற்ற முடியும் என பஃப்ரல் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இதேவேளை, வாக்குகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்த சலுகைகள் மக்களுக்கு வழங்கப்படவில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித் துள் ளமை குறிப்பிடத்தக் கது. (நி-6)

# அதிகரிக்கும் கட்சித்தாவல்கள்

## ரணிலுக்கு ஆதரவு வழங்கும் அங்கஜன்



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்க மேலும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித் துள்ளனர்.

தங்களது ஆதரவை நேற்று ஜனாதிபதியைச் சந் தித்து வெளியிட்டுள்ள னர்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி யின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங் கஜன் இராமநாதன் மற்றும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பாரா ளுமன்ற உறுப்பினரான சாரதி துஸ்மந்த ஆகி யோரே இவ்வாறு ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆத ரவு வழங்க தீர்மானித் துள்ளனர்.

இதேவேளை முன் னாள் அமைச்சர் எஸ். பி நாவின்னவும் ரணிலுக்கு ஆதரவு வழங்குவதாக தெரி வித்திருந்தார்.

ஜனாதிபதி தேர்தல் சூடு பிடித்துள்ள நிலையில் கட்சித் தாவல்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# யாழ்ப்பாணம் எக்ஸ்போ-2024 வர்த்தக கண்காட்சி ஆரம்பம்









(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண தொழிற் துறை களை பிரபல்யப்படுத்தி மேம் படுத்தும் நோக்குடன், "யாழ்ப் பாணம் எக்ஸ்போ 2024" எனும் வர்த்தக கண்காட்சி யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம் பமாகி நடை பெற்று வருகிறது.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமான இந்த கண்காட்சி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியினை மக் கள் முற்றிலும் இலவசமாக பார்வையிட முடியும்.

நேற்றைய நிகழ்வில் யாழ். மாவட்ட பதில் அதிபர் மருத லிங்கம் பிரதீபன், யாழ். இந்திய துணைதூதரக அதி காரி ராஜேஷ் , வடமாகாண உள் ளூராட்சி அமைச்சின் செய லாளர் பிரணவன், ஆகியோர் அதிதியாக கலந்து கொண்ட னர். (நி-6-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 400 மீற்றர் சட்டவேலி



முல்.வித்தியானந்தா கல்லூரி ஆண்கள் பிரிவில்-1 ஆம் இடம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி 1 ஆம் இடமும் பெண்களுக்கான சட்டவேலி ஓட்டத்தில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி முதலாம் இடத்தினையும் பெற்றுள்ளன

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான சட்டவேலி ஓட்டத்தில் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எம்.திசாந் தங்கப் பதக்கம், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த கே.நிலக்சன் வெள்ளிப் பதக்கம், மன்னார் சென் ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம்செய்த ஜெ.டெனான்சன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.



வவு. சைவப் பிரகாச மகளிர் பெண்கள் பிரிவில்-1 ஆம் இடம்

இதில் 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான 400 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ரி.புவிகா தங்கப் பதக்கம், வட்டக்கச்சி மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த கே.விதுஷி வெள்ளிப் பதக்கம், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த கே.தரனிகா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (நி-6-90)

# தட்டெறிதல் போட்டியில் நெல்லியடி மத்திக்கு தங்கம்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.விஸ்ணுப்பிரியன் தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடக்கு பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.விஸ்ணுப்பிரியன் 35.24 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் நெல்லியடி மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சுகிந்தர் 33.94 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சாமுஜன் 32.83 மீற்றர் தூரம் எறிந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (நி-6-90)

# உயரம் பாய்தல் போட்டியில் யாழ். மத்திக்கு 2 பதக்கங்கள்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 12 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ். மத்திய கல் லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.தாரங் தங்கப் பதக்கத்தை கைப் பற்றியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரு கின்றன.

இதில் 12 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.தாரங் தங்கப்பதக்கம் யாழ். மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த கே.கிவோன் வெள்ளிப் பதக்கம், முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்தைப் பிரதி நிதித்துவம் செய்த எஸ். ஜாபேஸ் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (நி-6-90)

# திருக்குடும்ப கன்னியர் மடம் 800 மீற்றர் ஓட்டத்தில் முதலிடம்



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலமும் முதலாம் இடத்தினை பெற்றுள்ளன. வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இதில் மன்னார் உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த பி.அனோசா வெள்ளிப்பதக்கம், மன்னார் மடுக்கறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.சுதர்சினி வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (நி-6-90)

# உயரம் பாய்தல் போட்டி யோகபுரம் மகா வித். தங்கம்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் துணுக்காய் யோகபுரம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.அன்பழகன் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார். வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. வவுனியா மடுகந்த தேசிய பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த சுபசிந்தா வெள்ளிப் பதக்கம், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெ.அபிஷன் வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (நி-6-90)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றத்தின் தீர்ப்பு மக்களுக்கு கிடைத்த வெற்றி

## மகிந்த தேசப்பிரிய



(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலிற்கு பின்னர் உள்ளூராட்சி தேர்தல் இடம்பெறும் என முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தல்கள் குறித்து உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பே மக்களிற்கு கிடைத்த வெற்றி.

தேர்தலைத் தாமதப்படுத்தியது தவறான நடவடிக்கை என தெரிவித்துள்ள அவர் நீதிமன்றம் இதனை உறுதி செய்துள்ளமை நீதியை நோக்கிய முக்கியமான நடவடிக்கை என தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் இந்த தீர்மானம் ஆச்சரியமளிக்கும் ஒன்றல்ல என தெரிவித்துள்ள அவர் தேர்தல்களை பிற்போடுவது, ஒத்திவைப்பது மக்களின் உரிமைகளை மீறும் செயல் என நீதிமன்றம் தொடர்ச்சியாக தெரிவித்து வந்துள்ளது என தெரிவித்துள்ளார்.

தாமதமானாலும் இறுதியாக நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது என நான் கருதுகின்றேன் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தும் என நான் எதிர்பார்க்கின்றேன் என மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். (நி-6)

# அனர்த்த உதவி வழங்கி வைப்பு

(சாவகச்சேரி)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகமும்- இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து அண்மையில் கடும் காற்று காரணமாக பாதிக்கப்பட்டு உடமைகளை இழந்த பொன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 3 குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வைத்திருந்தனர்.

அத்தியாவசிய உதவி வழங்கும் நிகழ்வில் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர், செஞ்சிலுவை சங்கத்தினர், கிராம அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மூன்று குடும்பங்களும் மலசல கூட வசதியின்றி வாழ்ந்து வந்த நிலையில் சங்கானை பிரதேச செயலரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் நிதிப் பங்காளர்களுடன் இணைந்து மலசலகூடம் அமைக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (நி-6-30)




## குமரன் வழி செல்க!

வஞ்சக லோபரை நாடாமல்- உயர்
வண்டமிழால் துதி பாடாமல்-கவி
நெஞ்சில் ஆற்றல் கொடுத்திடுமே-குக
நேசன் புகழைத் தொடுத்திடுமே!
வாடா! நமனே என அழைக்கும்-ஞான
வாளால் அவன்றன் கனவழிக்கும்-கொடுங்
கூடாப் பகையை உடன் வெல்லும்- வெற்றி
கூட்டும் குமரன் வழி செல்க!

புலவர்.செ.பரமநாதன்,
மண்டைதீவு.

# நாட்டில் அதிகரிக்கும் வறுமை

## எரான் கவலை

(கொழும்பு)

பொருளாதார சீர்திருத்தங்களுக்கு மத்தியில் அதிகரித்து வரும் வறுமை நிலைகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன கவலை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய சமூக-பொருளாதார சூழல் குறித்து கருத்து தெரிவித்த அவர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு உயர்வடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, இந்த எண்ணிக்கை சுமார் 3 மில்லியனிலிருந்து சுமார் 7 மில்லியனாக உயர்வடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியம் நிர்ணயித்த பல இலக்குகளை அரசாங்கம் அடைந்துள்ள நிலையில், மக்கள் மீதான கடுமையான பாதிப்பை அவர் எடுத்துரைத்துள்ளார்.



இவ்வாறான பொருளாதார நிலைமைகளால் தனிநபர்கள் பலர் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-6)

## நல்லைக் கந்தவேளே!

பேசாத ஊமையாம் குமரகுரு பரருக்கு
பேற்றுடன் ஆற்றலீந்து
கூசாது கவிபாடிச் சந்தமது முந்திவரக்
குலவியே அணைத்தாண்டவா!
வீசாத காற்றாக விம்மியழு திட்டதவர்
மேன்மைக்கு மெருகேற்றினாய்
மாசான மனங்களை மாற்றியரு ளூற்றிடும்
மாநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

# இராசிபலன்

24.08.2024
ஆவணி 08 , சனிக்கிழமை,
பஞ்சமி பிற்பகல் 1.29மணிவரை

அச்சுவினி பின்னிரவு 12.10 மணிவரை
சுபநேரம் -3.05-4.35 மணிவரை
இராகுகாலம் -9.05-10.35 மணிவரை

சந்திராஷ்டமம்
மகம்,பூரம்

வளவன்

**மேஷம்** வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்,கனவுபலிதமுண்டு, எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயமுண்டு.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**துலாம்** பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தனரிடையே மகிழ்ச்சி கூடும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மகரம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறர் நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**ரிஷபம்** சுப விரயங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்** ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம்மாறுவர், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பேச்சில் இனிமை தென்படும், ரோக பய முண்டு.

**விருச்சிகம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** பாகைப்பிரிவினைகள் சுமூகமாக முடியும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**தனுசு** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம், நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், வாய்ப்புகள் உங்களை நாடி வரலாம்.

**மீனம்** தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

அவசியமான காலத்தில் பொய்யும் மெய்போலவே பயன்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மகோற்சவ திருவிழாக்களை முன்னிட்டு நல்லூர் ஆலயத்திற்கு அருகில் உள்ள யாழ் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில், எதிர்வரும் 31ஆம் திகதி சப்பர திருவிழா அன்று, மாலை 4 மணி முதல் இரவு 8 மணிவரையிலும், செப்ரெம்பர் 1 ஆம் திகதி தேர்த்திருவிழா அன்றும் மறுநாள் தீர்த்த திருவிழா அன்றும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரையிலும், 3ஆம் திகதி பூங்காவனத் திருவிழா அன்று மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை இரத்த தானம் முகாம் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6-33)

## முத்தமிழ் விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-பெரியமாவடி சித்தி விநாயகர் கலை மன்றத்தின் முத்தமிழ் விழா நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 6.45 மணிக்கு நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளன.

நிலையத் தலைவர் மு.கதிர்வேலு தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.இராஜனும், சிறப்பு விருந்தினராக வர்த்தகர் ந.சிவபாலனும், கௌரவ விருந்தினராக கோவிற்குடியிருப்புக் கிராம அலுவலர் ஞானசேந்தனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது கௌரவிப்பு நிகழ்வு, கலை நிகழ்வுகள் மற்றும் நாடகம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

## நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

அமரர்.அ.அமிர்தலிங்கத்தின் 97 ஆவது பிறந்த நாள் நினைவுப் பேருரை இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.வேம்படி வீதி ரிம்மர் மண்டபத்தில் ஓய்வு நிலை மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசா தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் நினைவுப் பேருரையினை தமிழ் நாடு, திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணியும், சிறப்புரையினை தென்னிந்திய திருச்சபை ஆயர் கலாநிதி வி.பத்மதயாளன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# 400 வருடங்கள் பழமையான துணைவி ஆலயம் மீள்புனரமைப்பு





(யாழ்ப்பாணம்)

2016 ஆம் ஆண்டு அழிவடைந்த நிலையில் அடையாளம் காணப்பட்ட வட்டுக்கோட்டை துணைவி ஆலயத்தினை மீளுருவாக்கம் செய்யும் பணி யாழ்.மரபுரிமை மையத்தின் தலைவரும்வாழ்நாள் பேராசிரியருமான பரமு புஸ்பரட்ணம் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வாலயத்தினை பழைய நிலைக்கு மீள் உருவாக்கம் செய்வதற்குரிய திட்ட முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டு தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியுடன் யாழ்ப்பாண மரபுரிமைய மையத்தினரால் இவ்வாலயம் மீளுருவாக்கம் செய்யப்படவுள்ளது.

மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணம் தலைமையில் நடைபெற்ற சம்பிரதாயபூர்வமாக ஆரம்ப நிகழ்வில் இவ்வாலயத்தினை மீள் உருவாக்கம் செய்வதற்குரிய நிதி உதவியினை வழங்கவுள்ள பாலயோகஸ்தினி சிவயோகநாதன் அவர்களின் தந்தை கலாநிதி சிவயோகநாதன், தொல்லியல் திணைக்களகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய பிரதிப்பணிப்பாளர் பந்துலு, இவ்வாலயத்தினை மீளுருவாக்கம் செய்யும் முக்கிய பணியில் இருக்கும் கபிலன், செல்வி துஸ்யந்தி, யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உறுப்பினர் பார்த்திபன் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ பீட முன்னாள் உத்தியோகத்தர் நாக ஜெயக்குமார் உட்பட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அழிவடைந்த இவ் ஆலயத்தின் எஞ்சிய பாகங்களையும் அத்திவாரங்களையும் அழிபாடுகளையும் கொண்டு இவ்வாலயமானது கற்பகிரகம், அந்தராளம், முன்மண்டபம், துணைக்கோவில்கள், சுற்று மதில், மடங்கள், கேணி என்பவற்றை கொண்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்த முடிகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயத்தின் கற்பக்கிரகத்தின் பின்புறத்தில் பொறிக்கப்பட்ட கிரந்த எழுத்து சாசனத்தின் அடிப்படையாகக் கொண்டு இவ்வாலயமானது 400 வருடங்கள் பழமை வாய்ந்த ஆலயமென்பதுடன் இவ்வாலயத்தின் பெயர் பிரகேதீஸ்வரர் என்பதனையும் இக் கல்வெட்டில் இருந்து உறுதிப்படுத்திக் கொள்ள முடிகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சிப் பிரதேச செயலகம், தென் மராட்சி கலாசாரப் பேரவை மற்றும் சாவகச்சேரிப் பிரதேசசபை ஆகியன இணைந்து நடத்திய பண்பாட்டுப் பெருவிழா நிகழ்வு கடந்த புதன்கிழமை வரணி கலாசார மண்டபத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது கலைஞர்களுக்கு "இளங்கலைஞர் விருது, கலைச்சாகரம் விருது" ஆகியன வழங்கி கௌரவிககப்பட்டன. (படம்- சுபேசன்)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று சனிக்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.45-7.10 மணி வரை இடம்பெறவுள்ள அநுராகம் கவிநிலையத்தின் வீணை இசை நிகழ்வில் மிருதங்கம்- லோ. மாதங்கன், தபேலா-லோ.ஷங்கவன், நெறியாள்கை- வெ.விஜயபாரதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

7.15-8.05 மணிவரை சாயி மதுர கலைமன்றத்தின் (சுவிஸ்) இசையரங்கு நிகழ்வில் பாட்டு- சைந்தவி கேதீஸ்வரன், வயலின்-கே. வேலதீபன், மிருதங்கம்- க. இசைநிலவன், கடம்- சி. மாதுளன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# பொதுவேட்பாளருக்கு ஆதரவாக சங்குடன் பிரசார நடவடிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சியில் தமிழ் பொதுவேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து சங்குடன் நேற்று தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தாயகச் செயலணி என்ற அமைப்பின் ஏற்பாட்டில் தமிழரசுக் கட்சின் ஆதரவாளர்கள் உள்ளிட்ட ஏனைய கட்சிகளின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப்பலர் இணைந்து குறித்த பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வின் முன்னதாக கிளிநொச்சி கந்த சுவாமி ஆலயத்தில் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளுடன் துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் முன்னாள் கரைச்சி பிரதேச சபையினுடைய தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனபலர் கலந்து கொண்டனர்.(நி-6-315)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தேர்தலை அவதானிக்க 12 நாடுகளுக்கு அழைப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை அவதானிக்க 12 நாடுகளின் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித் துள்ளார்.**

இதன்படி இந் தியா, நேபாளம், பங் களாதேஷ், பாகிஸ் தான், மாலைதீவு மற்றும் ஏனைய நாடுகளும் அடங்கு வதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர் தல் வாக் களிப்பு உள்ளிட்ட சகல செயற்பாடுகளை யும் அவதானித்து அறிக்கையொன்றை வழங் கவுள்ளதாக வும் ஆணைக் குழுவின் தலை வர் தெரிவித்தார்.

(நி-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(216)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**0091956615 6719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,

077 839 3974


## தேர்தல் பிரசார செலவீனங்களை உறுதிப்படுத்தாவிட்டால் குடியுரிமை இரத்து

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் வாக் கெடுப்பு நிறைவடைந்து 21 நாட் களுக்குள் தேர்தல் பிரசார செல வினங்கள் தொடர்பான உறுதிப் படுத்தப்பட்ட தகவல்களை சமர்ப் பிக்காத வேட்பாளர்களின் குடியு ரிமை 3 ஆண்டுகளுக்கு இரத்து செய்யப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாள ராகப் போட்டியிட்ட மொஹமட் இல்யாஸ் மரணமடைந்தாலும் அவரின் பெயரை வாக்குச் சீட்டில் இருந்து நீக்கமுடியாதென தேர் தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அறிவித் துள்ளார்.

2024 ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதித் தேர்தலில் போட் டியிடும் அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களின் பெயர்களும் வாக்குச் சீட்டில் அச்சிடப்பட்டுள் ளதாகவும் அவர் சுட்டிக்காட்டி னார். இந் நிலையில் ஜனாதி பதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்ட மொஹமட் இல்யாஸ் திடீரென மாரடைப்பால் மரணமடைந்த தன் காரணமாக அவரின் பெயரை வாக்குச் சீட்டில் இருந்து நீக்கமுடி யாது. வாக்குச் சீட்டுகளை அச்சி டும் பணிகள் ஏற்கனவே ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

எனவே ஜனாதிபதி வேட்பா ளர் மொஹமட் இல்யாஸின் பெயர் வாக்குச் சீட்டில் குறிப்பிடப் பட்டுள்ளதாகவும் அவருக்குப் பதிலாக மாற்று நபரை முன் வைக்க பிரதிநிதிகள் விண்ணப் பித்தால் அதற்கு வாய்ப்பு இருப் பதாகவும் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்போது 2024 ஜனாதிப தித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களின் பெயர்களை நீக்கவோ அல்லது மாற்றவோ முடியாது என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித் துள்ளார்.

(நி-6)


**இலங்கை ஜனாதிபதி தேர்தலில் தமிழ் இனத்தின் பொது வேட்பாளராக போட்டியிடும் பா.அரியநேத்திரன் அவர்களுடனான விசேட கலந்துரையாடல்**

இடம் - திவ்ய ஜீவன சங்க மண்டபம் பருத்தித்துறை வீதி, நல்லூர் (சட்டநாதர் ஆலய அருகாமை)

காலம் - 24.08.2024 சனிக்கிழமை மு.ப 10.30 மணி

யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து கூட்டுற வாளர்களையும் கலந்து கொண்டு தங்களின் பூரண ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சமூகம்



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா 17 1/2
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: B.SC (Nursing) Visiting Lecturer
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்
தொ.இ: B/14743

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:பூரம்
கி.பா: 33
உயரம்:5'8"
தகைமை/தொழில்: B.SC , Land officer (GOV)
எதிர்பார்ப்பு:அரசதொழில் or வெளிநாடு
தொ.இ: B/14744

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 14
உயரம்:5'5"
தகைமை/தொழில்: Railway Technical Assistant(GOV)
எதிர்பார்ப்பு: அரசதொழில்
தொ.இ: B/14747

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு:1988 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 30
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: DO
எதிர்பார்ப்பு: அரச,தனியார் உத்தியோகம்
தொ.இ: G/14771

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சதயம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: தகுதியான வரன்
தொ.இ G/14778

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 36 1/2
உயரம்:5
தகைமை/தொழில்:A/L.computer designer
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ: G/14781

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உக்ரைனுக்கான மோடியின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்தது-அமெரிக்கா

(கீவ்)

சிறப்பு ரயில் மூலமாக போலந்தில் இருந்து 10 மணி நேரம் பயணம் செய்து கீவ் நகரை பிரதமர் மோடி சென்றடைந்தார். அவருக்கு உக்ரைன் வாழ் இந்தியர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

உக்ரைனுக்கான இந்திய பிரதமர் மோடியின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்தது என அமெரிக்க வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ரிச்சர்ட் வர்மா தெரிவித்துள்ளார்.



உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியாவுக்கு வருகைதந்துள்ள ரிச்சர்ட் வர்மா, டில்லியில் நடந்த கலந்துரையாடலில் பங்கேற்றுள்ளார்.

இதன்போது பிரதமர் மோடியின் உக்ரைன் பயணம் மகிழ்ச்சி அளிப்பதாகவும் இந்த பயணம் முக்கியத்துவம் வாய்ந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ரஷ்யா உடனான இந்தியாவின் நீண்டகால உறவை அமெரிக்கா புரிந்து கொண்டுள்ளதுடன் இது போரின் சகாப்தம் அல்ல இது அமைதிக்கான நேரம் என பிரதமர் மோடி கூறியது பாராட்டுக்குரியது எனவும் வலியுறுத்தியுள்ளார். (நி-6)

## இஸ்ரேல் வான் தாக்குதல் 50 பாலஸ்தீனியர்கள் பலி

(ஜெருசலேம்)

காசா மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 50 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

நேற்று முன்தினம் இஸ்ரேல் இராணுவம் காசா மீது திடீரென நடத்திய வான் தாக்குதலில் 50 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன் மூலம் கடந்த 10 மாதங்களில் இஸ்ரேல் - காசா இடையேயான போரில் இதுவரை 40 ஆயிரத்து 225 பேர் பலியானதாகவும் 92 ஆயிரத்து 981 பேர் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மேற்காசிய நாடான இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனியர்கள் அதிகம் வசிக்கும் காசா உள்ளிட்ட பகுதிகள் மீது இஸ்ரேல் இராணுவம் கடந்த ஆண்டு ஒக்டோபரில் தாக்குதலைத் தொடங்கியது. காசாவை



தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள "ஹமாஸ்" என்ற பயங்கரவாத அமைப்பு இஸ்ரேல் இராணுவத்திற்கு எதிராக போரை நடத்தி வருகிறது. கடந்த 10 மாதங்களாக இந்தப் போர் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## நேபாளத்தில் ஆற்றில் கவிழ்ந்து பேருந்து விபத்து

### 14 பேர் உயிரிழப்பு



(காத்மண்டு)

நேபாளத்தில் 40 பயணிகளுடன் பயணித்த இந்திய பதிவெண் கொண்ட பயணிகள் பேருந்து ஒன்று ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேபாளத்தில் 40 பேருடன் பயணித்த இந்திய பயணிகள் பேருந்து ஒன்று தனாஹூன் மாவட்டத்தில் உள்ள மர்ஸ்யாங்டி ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்தச் சம்பவத்தை நேபாள பொலிஸ் உறுதி செய்துள்ளது. இந்த விபத்தில் 14 பேர் பலியானதாகவும் 16 பேர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (நி-6)

## ரஷ்ய ஜனாதிபதியை சந்தித்தார் சீனப் பிரதமர் லீ கியாங்



(மொஸ்கோ)

ரஷ்யாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீனப் பிரதமர் லீ கியாங் ஜனாதிபதி விளாடிமிர் புடினைச் சந்தித்துள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் ரஷ்ய - உக்ரைன் போரில் சீனா மௌனக் கொள்கையை கடைபிடித்து வரும் நிலையில், ஆயுதம் ஏந்திய போரை தனது நாடு ஒருபோதும் ஆதரிக்காது என சீன பிரதமர் தெரிவித்துள்ளார். (நி-6)

## பிரித்தா... எச்சரிக்... அமைச்...

(மொஸ்கோ) —

உக்ரைனில் மட்டு... மற்றும் கேந்திர மு... மீது தாக்குதல் மே... பாதுகாப்பு அமை... எச்சரிக்கையை வி...

பிரித்தானியா வழங்கியுள்ள ஆயுதங்களை உக்ரைன் பயன்படுத்தினால், ரஷ்யா கடுமையான தாக்குதலில் இறங்கும் என்று அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த அறிக்கையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளதுடன் இரு நாடுகளும் நேரடியாக

## தாய்லாந்தில் வி... 9 பேர் உ...



(பாங்கொங்)

தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கிலிருந்து பயணித்த உள்நாட்டு பயணிகள் விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக் விமானநிலையத்திலிருந்து சுற்றுலாப்பயணிகள் உள்ளிட்டவர்களுடன் பயணித்த உள்நாட்டு விமானமொன்று நேற்று முன்தினம் விபத்துக்குள்ளாகியுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானியாவையும் தாக்குவோம்

# க்கை விடுக்கும் மொஸ்கோ!

## ைச்சரின் அறிவிப்பால் உச்சகட்ட பதற்றம்

**மட்டுமன்றி பிரித்தானிய நிலைகள்
ிர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள்
ல் மேற்கொள்ளும் என ரஷ்யாவின்
அமைச்சர் வெளிப்படையாக கடும்
ப விடுத்துள்ளார்.**



மோதும் நிலை ஏற்படலாம் என்ற அச்சம் மேலோங்கியுள்ளது.

இதற்கான காரணம், பிரித்தானியா பல நவீன ரக ஆயுதங்களை உக்ரைனுக்கு வழங்கியுள்ள நிலையில், அமெரிக்கா வழங்கியுள்ள ஆயுதங்களைக் காட்டிலும் , பிரித்தானியா சிறிய அளவிலான ஆயுதங்களை தான் கொடுத்துள்ளது.

எனினும் பிரித்தானியா கொடுத்துள்ள ஆயுதங்கள் என்பது, பல மடங்கு அழிவை ஏற்படுத்தக் கூடியவை என்பது ஒரு புறம் இருக்க, அவை மிக மிக நவீன ரக ஆயுதங்கள் ஆகும். இதனால் ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு பெரும் பங்கம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் உக்ரைன் படைகள் பிரித்தானியா வழங்கிய சலெஞ்சர் 2 கவச வாகனங்களைப் பயன்படுத்தியே ரஷ்யாவுக்குள் ஊடுருவி நிலைகொண்டுள்ளதுடன், பிரித்தானியா மேலும் பல நவீன ஏவுகணைகளை உக்ரைனுக்கு கொடுத்துள்ளது.

ரஷ்யாவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர், ஒரு பிரித்தானிய நபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர் அந்நாட்டில் உளவு பார்த்தார் என ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

பிரித்தானிய உளவுத் துறையைச் சேர்ந்த குறித்த நபரை தாம் கைது செய்துள்ளதாக ரஷ்யா குறிப்பிட்டுள்ளதுடன் கடும் ஆத்திரமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலைமை மோசம் ஆனால் ரஷ்யா, உக்ரைன் மற்றும் வேறு நாடுகளில் உள்ள பிரித்தானிய தளங்களை ஏவுகணை கொண்டு தாக்கக் கூடும் என குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை அவ்வாறு நடந்தால் பிரித்தானியா இதற்கு பதிலடி கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவாகுவதுடன் இது மூன்றாம் உலகப் போருக்கு வித்திடலாம் என தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## விமான விபத்து
## டயிரிழப்பு!



ளது.

குறித்த விமானமானது, தனது பயணத்தை ஆரம்பித்து 40 நிமிடங்களில் சச்சோங்சாவ் மாகாணத்தில் உள்ள சதுப்பு நிலத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்த விபத்தில் விமானி உள்ளிட்ட விமானத்தில் பயணித்த 9 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

விபத்தையடுத்து உடனடியாக அங்கு விரைந்த பாதுகாப்பு மற்றும் மீட்புக் குழுவினர் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

விமானம் விபத்துக்குள்ளான பகுதியானது சதுப்பு நிலமாக இருந்தமையால் சிதைவடைந்த உடற்பாகங்களை மீட்டமை பெரும் சவாலாக இருந்ததாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் உயிரிழந்தவர்களில் ஹொங்கொங்கை சேர்ந்த ஐந்து சீன பிரஜைகளும், தாய்லாந்து பிரஜைகள் இருவரும் இரண்டு விமானிகளும் உள்ளடங்குவதாக தகவல் வெளியாகியுள்ளது.

விபத்துக்கான காரணம் அறிவிக்கப்படாத நிலையில், சம்பவம் தொடர்பான விசாரணைகளை அந்நாட்டு அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

# ஹசீனாவை நாடு கடத்துங்கள்
## பங்களாதேஷ் எதிர்க்கட்சிகள் கோரிக்கை

(டாக்கா)

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா இந்தியாவில் தஞ்சம் அடைந்திருக்கும் நிலையில் அவரை நாடு கடத்துங்கள் என பங்களாதேஷின் முக்கிய எதிர்க்கட்சி இந்தியாவுக்கு கோரிக்கை விடுத்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



பங்களாதேஷில் மாணவர்கள் இட ஒதுக்கீடு போராட்டம் நடந்த நிலையில் அது வன்முறையாக மாறியதால் பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஷேக் ஹசீனா நாட்டிலிருந்து தப்பி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். அவர் மீது கொலை வழக்கு உட்பட சில வழக்குகள் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந் நிலையில் ஷேக் ஹசீனாவை நாடு கடத்த வேண்டும் என்று வங்கதேசத்தின் முக்கிய எதிர்க்கட்சி பிஎன்பி இந்தியாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

ஷேக் ஹசீனாவை பங்களாதேஷ் அரசிடம் சட்டபூர்வமாக இந்தியா ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர் நீதி மன்றத்தில் வழக்கு விசாரணையை எதிர்கொள்ள இருப்பதால் இந்தியா அதற்கு உதவ வேண்டும் என்றும் பிஎன்பி கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயத்துறையின் மூலமே பொருளாதாரத்தை வலுப்படுத்தலாம்

## பிரசாரக் கூட்டத்தில் அநுரகுமார

(கொழும்பு)

நாட்டில் விவசாயத்துறையை ஊக்குவிப்பதன் மூலமே பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். கடுகன்னாவ பகுதியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நாடளாவிய ரீதியாகவுள்ள மக்களை அழைத்து ரணில் விக்கிரமசிங்க அநுரா தபுரத்தில் கூட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். அன்றைய தினத்திலிருந்து இது வரையில் எந்த கூட்டங்களும் நடத்தப்படுவதில்லை.

பொதுமக்களின் நிதியைக் கொண்டு முழு அளவிலான தேர்தல் பிரசார பணிகளை ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ளார். வாகனம், எரிபொருள், வீடு, மின்கட்டணம், நீர்க் கட்டணம் என்பனவற்றுக்கு அரசாங்கத்தின் நிதியே பயன்படுத்தப்படுகிறது. மனுஷ நாணயக்கார மற்றும் ஹரீன் பெர்னாண்டோ ஆகியோர் அண்மையில் அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப் பட்டனர். பதவி நீக்கப்பட்ட இரண்டு நாட்களில் ஜனாதிபதியினால் குறித்த இரு வருக்கும் ஆலோசகர் பதவிகள் வழங்கப்பட்டன. நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டுமானால் விவசாயத் துறை மேம்பட வேண்டும். கட்டங் கட்டமாக நாட்டின் விவசாயத் துறையை முன்னேற்றமடையச் செய்வதற்கான நடவடிக்கை எடுக் கப் படும்" என அநுர குமார திஸா நாயக்க மேலும் தெரிவித்தார். (நி-6)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்.திரு. இராசையா இந்திரபாலா
(மதுவரி அலுவலர்)

மல்லாகம் மதுவரி நிலைய அலுவலர் அமரர். திரு.இராசையா இந்திரபாலா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மனம் வருந்துவதோடு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் அவருடன் பணிபுரிந்த மதுவரி உத்தியோகத்தர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

மண்ணில்: 15.11.19778. விண்ணில்: 21.08.2024

அங்கத்தவர்கள்/பணிப்பாளர்கள்/பணியாளர்கள்
சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

(1036)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 170 | 120-160 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 100 | 250 | 150-200 | 200 |
| தக்காளி | 250 | 300 | 280 | 240 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 240 | 180 | 150-200 | 200 |
| கோவா | 300 | 250 | 300 | 350 | 400 |
| கரட் | 350 | 320 | 350 | 400 | 400 |
| பூசணி | 180 | 140 | 120 | 80 | 120 |
| புடோல் | 80 | 150 | 100 | 100 | 150 |
| வாழைக்காய் | 250 | 250 | 280 | 200-250 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 300 | 220 | 200 | 220 | 200 |
| பாகற்காய் | 300 | 300 | 280 | 300 | 300 |
| வெண்டக்காய் | 100 | 100 | 120 | 80-150 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 150 | 280 |
| பயற்றங்காய் | 250 | 300 | 140 | 200-250 | 160 |
| லீக்ஸ் | 320 | 400 | 300 | 400 | 400 |
| பீற்றூட் | 160 | 200 | 50 | 250 | 160 |
| கறிமிளகாய் | 500 | 200 | 600 | 450 | 700 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 100 | 40-60 | 150 |
| போஞ்சி | 400 | 650 | 550 | 470 | 600 |
| கத்தரி தம்புள்ள | 150 | 120 | 180 | -- | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 50 | 50 | 120 |
| தேசிக்காய் | 400 | 500 | 500 | 300-350 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 130 | 100 | 80-140 | 100-130 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 650 | 800 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 80 | 80 |

## இன்று ஒரு தகவல் 219



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உயிர் நம் கையில்

கொஞ்ச நாளைக்கு முன்பு ஒரு சினிமா பார்த்தோம். அதிலே ஒரு சீன்! அதாவது ஒரு ஆசாமி சாகக் கிடக்கிறார். வெளிநாட்டிலே இருந்து அவரோடு பையன் விமானத்திலே இருந்து இறங்கி ஒரு காரை பிடித்து வீட்டுக்கு வந்து சேரு கிறான்.

அப்பாவைப் பார்க்கிறான். அப்பா பையனைப் பார்க்கிறார். மெதுவாக வாயைத் திறந்து உன்னைக் கண் ணாலே ஒரு தரம் பார்த்துவிட்டு கண்ணை மூட வேண்டும் என்பதற்காகத்தான் உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தேன் என்றார்.

அதே மாதிரி பையனைப் பார்த்ததும் கொஞ்ச நேரத்திலே கண்ணை மூடிவிட்டார். அந்தப் படத்தைப் பார்த்து விட்டு திரும்பி வந்து கொண்டிருந்த போது ஒரு நண்பர் சினிமாவிலே தான் இது மாதிரியெல்லாம் நடக்கும் என்றார்.

எதைச் சொல்கின்றீர்கள் என்று கேட்டேன். பையன் வெளிநாட்டிலேயிருந்து வந்து சேர்கின்ற வரைக்கும் சாகக்கிடக்கின்ற அப்பா உயிரை கையிலே பிடித்துக் கொண்டு இருக்கின்றது சினிமாவிலே தான் சாத்தியம். நடைமுறை யிலே அது சாத்தியமில்லை. வேளை வந்தால் போய்ச் சேர வேண்டியது தானே என்றார்.

இவர் இப்படி சொல்லுவது சரி என்று தானே நமக்கெல்லாம் தோன்றுகிறது. ஆனால் கலிஃபோர்னியாவிலே நடந்த ஒரு ஆராய்ச்சியிலே முடிவு வேறே மாதிரி இருக்கிறது.

மரணத்தை கொஞ்சம் தள்ளிப் போடவேண்டுமா? அது மனிதனாலே முடியும்! என்பது இந்த ஆராய்ச்சி முடிவு. சரி அப்படி எவ்வளவு காலம் தான் தள்ளிப் போட முடியும் என்று கேட்டால் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் அது? முடியும் என்று சொல்கிறார்கள். அடுத்து வரப்போகின்ற ஒரு முக்கியமான நாள் வரைக்கும் நாம் இருக்க வேண்டும் என்று நினைத்தால் அது முடியுமாம்.

இப்போது உதாரணத்திற்கு ஒருவர் மரணப்படுக்கையிலே இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருடைய மகனுக்கு இல்லை என்றால் பேரனுக்கு இன்னும் பத்து நாட்களிலே கல்யாணம் நடக்கப் போகிறது. அல்லது அவர்கள் குடும்பத்திலே ஏதோ ஒரு விஷேசம் வரப் போகின்றது.

சாகக்கிடக்கிறவர் அந்த சந்தோஷத்திற்காக காத்திருக்க ஆரம்பித்து விட்டார் என்றால் அவருக்கு உயிர் போகாதாம்! சீனாவிலே அறுவடை திருநாள் என்பது மிகவும் விஷேசம்.

மக்கள் எல்லோரும் மிகவும் சந்தோ சமாக கொண்டாடுகிற திருவிழா அது. அந்த அறுவடைத் திருநாளுக்கு ஒரு வாரம் முன்பு சராசரியாக அங்கே சாகிறவர்கள் எண்ணிக்கை 35 சதவீதம் வரைக்கும் குறையுதாம்! ஆனால் பாருங்கள் அதே அறுவடைத்திருநாளை தொடர்ந்து வருகின்ற அடுத்த வாரத்திலே இறப்பு 35 சதவீதமாக அதிகமாகிறதாம்!

ஒரு சந்தோஷமான திருவிழா! அதற்கு முன்னைய வராத்திலே இறப்பு விகிதம் குறைவாக இருக்கிறது. அதற்குப் பின்னர் வாரத்திலே இறப்பு விகிதம் அதிகமாக இருக் கிறது. இதற்கு என்ன கராணமாக இருக்கும்? அதை ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள் அப்படி பார்த்துவிட்டு என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா?

ஒரு மகிழ்ச்சியான விடயம் காத்துக்கொண்டி ருக்கின்றபோது மரணத்தோடு போரா டுவதற்கு மனவலிமை அதிகரிக்கின்றதாம்!

அந்த மகிழ்ச்சியான அனுபவத்தை இறப்பின் மூலமாக நாம் இழந்து விடக்கூடாது என்று எண்ணம் மேலோங் குகின்றதாம்! மனதினுடைய ஆதிக்கம் உடம்பினை ஆக்கிர மிக்கின்றதாம்.

அதனாலே மனதிலே இருக்கின்ற விருப் பமும் ஆசையும் நிறைவேறுகிற வரைக்கும் சாவுகிட்ட நெருங் குவது இல்லையாம். ஆனால் ஒரு விடயம். இதற்கு அதிக மான மனோதிடம் மிகவும் அவசியம்.

இது ஒரு பத்திரிகையிலே நான் பார்த்த ஒரு குறிப்பு. இதை எத்தனை பேர் ஒத்துக்கொள்வீர்களோ என்று எனக்குத் தெரியவில்லை! இருந்தாலும் இப்பவும் கடைசி நேரத்திலே வைராக்கியமாக இருந்து நினைப்பதை சாதித்துவிட்டு மேலே போகிறவர்கள் பல பேர் உண்டு. அதை பல பேர் அனுபவத்திலே பார்த்திருக்கலாம்.

இதிலிருந்து நாம் ஒரு விடயத்தை நன்றாக புரிந்து கொள்ள முடிகிறது. அதாவது நமது மனது உறுதியாக இருந்தால் உடம்பை பத்திரமாக வைத்திருக்க முடியும்! உயிரையும் பிடித்து வைத்துக்கொள்ள முடியும்.

ஒரு பெரியவர் மரணப்படுக்கையிலே இருந்தார். அவர் பையன் வெளிநாட்டிலே இருந்து வந்து கொண்டிருக்கின்றான்.

விமானத்திலே வைத்தியர் அவருக்கு தீவிரமாகச் சிகிச்சை கொடுத்துக் கொண்டிருக்கிறார். அப்போது அந்த வைத்தியரைப் பார்த்து அந்தப் பெரியவர்.

என் பையன் இங்கே வந்து சேரும் வரைக்கும் நான் இருப்பேனா வைத்தியரே என்று கேட்டார். நான் இருக்கின்றேன் கவலைப்படாதீங்க என்றார் வைத்தியர். அதற்கு அந்தப் பெரியவர்நீங்க இருப்பீங்க வைத்தியரே! நான் இருப்பேனா என்று கேட்டேன்! என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது 33 வருட ஆன்மிகப் போராட்டப்பாதையில்...

என் இனிய நெஞ்சங்களே!

20.08.2024 வலம்புரிப் பத்திரிகையிலே ஈசுரவிநாயகரின் அருளால் எங்களுக்கு கிடைக்கப் போகும் ஆட்சி பற்றிய ஓர் கண்ணோட்டம் பார்த்தோம். இப்போது ஓர் அவசர செய்தி... ஈசுர விநாயகர் தனது ஊஞ்சல் பாடலை எல்லா மக்களுக்கும் தெரிவிக்கும்படி சங்கடகர சதுர்த்தியன்று (22.08.2024) கூறியருளினார்.

காரணங்கள் இல்லாமல் காரியங்கள் நடக்காது. திருவிழாக்களைப் பாருங்கள் அங்கே முடிவு நாள் தீர்த்தத்திருவிழா அன்று மாலை ஊஞ்சல் பாட்டுப்பாடி கொடியிறக்கும் திருவிழா. பூஜைகள் நிறைவு பெறும்.

இங்கேயும் ஊஞ்சல் பாட்டை மக்கள் எல்லோருக்கும் தெரிவிக்கும் படி கூறியருளுகின்றார் என்றால் அதன் அர்த்தம் எங்கள் தீராத பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சந்தர்ப்பம். சூழ்நிலைகளை உருவாக்கி முடிவுக்கு கொண்டு வரப்போகின்றார் என்பதாகும். எனவே ஈசுர விநாயகரின் ஊஞ்சல் பாட்டை அனைத்துத் தமிழ் மக்களும் ஒருமுறையாவது அவரை நினைத்துப் பாடியே ஆக வேண்டும். இது அடியேனின் வேண்டுகோள்.அதாவது எங்களால் முடியாது நீரே முடித்துத் தாரும் என்று அவரை மன ஊஞ்சலில் இருத்தி இப் பாடலைப் பாடிப் பாடி ஆட்டுங்கள், நிச்சயம் எல்லோரிடமும் ஓடி வருவார். நாட்டுப்பிரச்சினைக்கு மட்டுமல்ல வீட்டுப் பிரச்சினைக்கும் தான். ஊஞ்சல் ஆடுவது யாருக்குத் தான் பிடிக்காது.

இப் பாடலைப் பாடியவர் பறாளாய் விநாயகன் என்னும் புனைபெயரில் வாழ்ந்த சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளை என்பவரால் 1974 இல் பாடப்பட்டது.

## பறாளை விநாயகர் ஊஞ்சல்

காப்பு

சீர்பரவு சிவனடியார் பத்தி யோடுஞ்
சிவநெறியைப் பேணுகின்ற தெய்வ ஊராம்
கார்மருவு சோலையயில் குயில்கள் பாடக்
கருணைமுரு கனருள்சேர் மயில்க ளாடும்
பேர்பரவு சுழிபுரத்துப் பறாளை மேவும்
பெரும்புகழ்சேர் ஈசுரவி நாய கர்மேல்
பார்பரவு ஊஞ்சலிசை பண்ணிற் பாடப்
பறாளையுறை விநாயகர்தாள் பணிந்து வாழ்வாம்

1.
திருவோங்கு நால்வேதத் தூண்கள் நாட்டிச்
சித்தாந்த சிவாகமமாம் விட்டங் கூட்டி
அருளோங்கு திருப்புராண வடங்கள் பூட்டி
அன்போங்கு திருமுறையாம் பலகை மாட்டி
உருவோங்கு உபநிடதச் சிங்கந் தாங்க
ஓங்காரப் பிரணவமாம் பீட மேவித்
திருவோங்கு நல்லொளிசேர் பதியாந் தெய்வந்
திகழ்பறாளை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்

2.
ஒத்தசுடர் ஓரிரண்டுங் குடைகள்
தாங்க ஒளிர்வாயு சாமரைகள் இரட்டி நிற்கக்
கொத்துமலர் தேவர்குழாந் தூவி ஏத்தக்
குளிர்விசிறி இந்திரனார் வீசி நிற்கச்
சித்திரமாய் அக்கினிகண் ணாடி காட்டச்
சீர்மைமிகு நற்குபேரன் அடப்பை தாங்கப்
பத்திநிறை மெல்லியலார் பண்கள் பாடப்
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்

3.
மந்திரஞ்சேர் மாகங்கை நீரா லாட்டி
மணியொளிசேர் பளிதநறுஞ் சாந்நம் ஆட்டிச்
சுந்தரஞ்சேர் பட்டுடுத்துப் பொட்டு மிட்டுத்
தூயகலன் பலபூட்டித் தூபங் காட்டிக்
கந்தமலர் நறுந்தொடையல் மாலை சூட்டிக்
காந்தியொளிர் தூயதீப ஒளியுங் காட்டிப்
பந்தமெலாம் விட்டகல அருளைக் கூட்டும்
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்

4.
வான்மதிதோய் சடையாட மகுடம் ஆட
மாகரிமா நுதலாடப் பட்டம் ஆடத்
தேன்மலர்சேர் செவியாடக் குழைகள் ஆடச்
செயமார்பில் உபவீதந் தாமம் ஆட
கான்மலியுங் கரமாடத் தொந்தி யாடக்
கடியவினை அடியரிடர் யாவு மோடப்
பான்மருவு மலர்ப்பாதம் ஆட ஆடும்.
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்

5.
மின்னனைய அரம்பையர்கள் மருங்கி லாட
மிளிர்முழவு துடிமுதலாம் நாதம் நீடக்
கின்னரர்நற் கிம்புருடர் இயக்கர் நாகர்
கேடில்சீர் தும்புருநா ரதர்கள் மற்றும்
கன்னலொடு தேன்பருப்புக் கலந்தே நல்குங்
கழனிவயல் உழவரெலாம் பள்ளுப் பாடப்
பன்னுமறை வேதியர்கள் பரவிப் போற்றப்
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்

6.
கயமுகத்து அசுரனவன் தேவர் தம்மைக்
கணந்தோறும் வருத்தியிடர் மிகுத்த போழ்து
தயவுபுரி சிவன்உமையும் தந்தி யாகித்
தந்தனரே தந்திமுகத் தெந்தை யன்றே
நயமுடனே கயமுகனை எலியே யாக்கி
நாடோறும் நன்மையெலாம் நல்குந் தேவே!
பயமின்றிப் பழவினைகள் யாவும் ஓட்டும்
பறாளையுறை பரஞ்சோதி! ஆடீர் ஊஞ்சல்

7.
முன்னொருநாள் ஒல்லாந்தர் பறாளை நாடி
முழுவதுமே அழிவுசெய வந்தார் தேடி
மின்னலெனக் காகமெலாம் ஒன்றாய்ச் சாட
விழியழிந்து மொழிகுழறி அழுதார் ஓடி
கன்னலென அன்னவரும் அருளைக் கூடக்
காத்தளித்த கணபதியே! கருணைத் தேவே!
பன்னலஞ்சேர் பஞ்சமுகப் பரனே! கோவே!
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்.

8.
அங்கைதனைச் சிரமீது பத்தர் வைத்தே
ஐந்தெழுத்தின் உட்பொருளைத் தெளியும் போழ்து
சங்கைபெறத் திரோதான சத்தி தன்னைச்
சார்தருநற் சிவசத்தி யாகச் செய்து
தங்குமவர் ஆகாமி யத்தை வீட்டிச்
சார்தருசஞ் சிதவினைகள் யாவு மோட்டிப்
பங்கயமாந் திருவருளைப் பொழியுந் தேவே!
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்

9.
மலர்மாலை தொடுத்தணிந்து துதிப்போர் ஓர்பால்
மஞ்சனநீர் பாலமுதம் படைப்போர் ஓர்பால்
அலர்கொண்டு மணிதூவி நிற்போர் ஓர்பால்
அன்பொடர கரசிவனே என்போர் ஓர்பால்
சிலர்வந்து சிலைபோல நிற்பார் ஓர்பால்
சித்தமெலாம் முத்திநலம் பெற்றோர் ஓர்பால்
பலர்புகழும் பாமாலை படிப்போ ராகப்
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல்

10.
ஐந்துமுகத் தைங்கரரே! ஆடீர் ஊஞ்சல்
ஆறுமுகற் கருந்துணையே! ஆடீர் ஊஞ்சல்
செந்துவர்வாய் உமைமைந்தா! ஆடீர் ஊஞ்சல்
செஞ்சடையோன் திருப்புதல்வா! ஆடீர் ஊஞ்சல்
தந்தைவலம் வந்தமைந்தா! ஆடீர் ஊஞ்சல்
தஞ்சமெனக் காத்தருள்வோய்! ஆடீர் ஊஞ்சல்
பந்தவினை நீக்குபவா! ஆடீர் ஊஞ்சல்
பறாளையுறை பரஞ்சுடரே! ஆடீர் ஊஞ்சல்

11. அருமைமறநல் லாகமங்கள் வாழி! வாழி!!
அருளாளர் தவநெறிகள் வாழி! வாழி!!
திருமுறைசேர் திருப்புராணம் வாழி! வாழி!!
திருநீறுங் கண்டிகையும் வாழி! வாழி!!
பெருவளஞ்செய் ஐந்தெழுத்து வாழி! வாழி!!
பேருலகிற் றருமநெறி பெருகி வாழி!
ஒருமையுடன் பறாளைவிநா யகனைப் போற்றும்
உலகமெலாம் நீடூழி வாழி! வாழி!!

"பார் தெரியுது பறாளாயான்பதி பக்தர் குறைதீர்க்கும் சந்நிதி", சோழியூரான், பிறைசூடிக்குரு. (ஆன்மீக வாதியும் சந்ததிப் பூசகரும் பரம்பரைப் பரிபாலகரும்)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3204

### கஜானனன்

அம்மா: டேய் ஏன்டா முடிய நீளமா வளர்த்துக் கொண்டு ரப்பர் பேண்டெல்லாம் மாட்டிட்டு அலையறே?

பையன்: இதுதாம்மா இப்போ ஃபேஷன்

அம்மா: நாயே... உங்க அக்காவ பொண்ணு பார்க்க வந்தவங்க உன்ன பிடிச்சிருக்கு என்று சொல்லிட்டு போயிருக்காங்க...

### தினேஷ்

ஆசிரியர்: என்னடா உளர்றே... ஒரு வருடத்திற்கு எப்படி 24 மாதம் வரும்



மாணவன்: தமிழில் 12 மாதம் இங்கிலீஸ்ல 12 மாதம்

### விதுசன்

எதே..

ஏண்டியம்மா உனக்கு கல்யாணம் ஆயிடுத்தா...? ஆமாம் மாமி...
உன்வீட்டுக்காரர் என்ன செய்து கொண்டு இருக்கிறார்



வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறார்...

### பிரசாந்

மனைவி : ஏங்க, நீங்க வர வர இளைச்சிக் கிட்டே போறதா எங்கப்பா சொல்லி வருத்தப்பட்டாருங்க...

கணவன் : அதுக்கு நீ என்ன சொன்னே?

மனைவி : ஆபிஸ் வேலையும் பாத்துட்டு, வீட்டு வேலையும் பாத்தா அப்படித்தான் இருக்கும்னு சொன்னேங்க...




### டஜிதரன்

ராசி பலன்ல நல்லதா போட்டிருந்தா அது நமக்கு....



அதுவே கெட்டதா போட்டிருந்தா... அது நம்ம ராசி இல்ல

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 3
# பொன்னியின் செல்வன்
## காவியத் தொடர் 565





உம்முடைய அழகான நண்பன் ஆபத்துக்கு உள்ளானான். இல்லாவிடில், அந்தப் பொக்கிஷ நிலவறையில் முத்துக் குவியல்களுக்குப் பக்கத்தில் உம்முடைய எலும்புகள் இப்போது கிடைக்கும்!"

வந்தியத்தேவன் வியப்புக்கடலில் மூழ்கினான். அவள் கூறியவையெல்லாம் உண்மையென்று அவனால் நம்பமுடியவில்லை. உண்மையில்லாவிட்டால் தான் அன்று அங்கு ஒளிந்திருந்தது எப்படி தெரிந்தது? சம்பிரதாயத்துக்காகவாவது நன்றி கூறவேண்டியது அவசியம் என்று கருதி, "அம்மணி! என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

"வேண்டாம்! மனத்தில் இல்லாததை வெளியில் எதற்காகச் சொல்லப் பார்க்கிறீர்? எனக்கு நன்றி செலுத்த முயல வேண்டாம்!"

"இல்லை தேவி"

"உம்முடைய உயிரை அன்று காப்பாற்றியதைப் பற்றி எதற்காகச் சொன்னேன் தெரியுமா? உம்முடைய நன்றியை எதிர்பார்த்தல்ல. மறுபடியும் அந்தச் சுரங்க வழியை உபயோகிக்கப் பார்க்க வேண்டாம் என்று எச்சரிப்பதற்காகத்தான். அங்கே இப்போது மிகவும் வலுவான காவல் போடப்பட்டிருக்கிறது. தெரிகிறதா?"

"மறுபடியும் அந்தப் பக்கம் போகும் உத்தேசமே எனக்கு இல்லை."

"அது ஏன் இருக்கப் போகிறது? உதவி செய்தவர்களை நினைக்கும் வழக்கமேதான் உமக்கு இல்லையே? உம்மால் உம்முடைய சிநேகிதன் ஆபத்துக்கு உள்ளானான். அவனை என்னுடைய அரண்மனைக்கே எடுத்துவரச் செய்து அவனுக்கு வைத்தியம் பண்ணுவித்துக் குணப்படுத்தி, அனுப்பினேன். அதில் உமக்குத் திருப்தி தானே? அல்லது நம்பிக்கைத் துரோகத்தைப் போல் சிநேகத் துரோகமும் உம்முடன் பிறந்ததா?"

நந்தினியின் வார்த்தை ஒவ்வொன்றும் விஷபாணத்தைப் போல் வந்தியத்தேவனுடைய உள்ளத்தில் ஊடுருவிச் சென்றது. அவன் துடிதுடித்து மௌனமாயிருந்தான்.

"உம்முடன் கோடிக்கரைக்கு வந்த வைத்தியர் மகனைத்தான் உமக்குப் பதிலாகப் பிடித்துக் கொடுத்து அனுப்பினீர் அவன் என்ன ஆனான் என்று விசாரித்தீரா?" "தங்களைக் கேட்க எண்ணினேன்."

"சொல்கிறேன் ஆனால் உம்முடன் இலங்கையிலிருந்து புறப்பட்ட இளவரசர் அருள்மொழிவர்மர் என்ன ஆனார்? அதைச் சொன்னால் நான் வைத்தியர் மகனைப் பற்றிச் சொல்லுவேன்."

வந்தியத்தேவனுக்கு உடம்பை ஒரு உலுக்கி உலுக்கிப் போட்டது. இளவரசரைப் பற்றி அறிவதற்காகத் தான் தன்னை இவள் இப்படிப் பாடாய்ப் படுத்தினாளோ என்று தோன்றியது. ஏமாந்துபோகக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டான்.

"அரசி! அதைப்பற்றி மட்டும் என்னைக் கேட்க வேண்டாம்" என்றான்.

"ஆம்! அதைப்பற்றி மட்டும் கேட்கக் கூடாதுதான்! கேட்டாலும் உம்மிடமிருந்து மறுமொழி வராது என்று எனக்குத் தெரியும். உம்முடைய காதலி எப்படியிருக்கிறாள்? அதைப்பற்றியாவது எனக்குச் செல்லலாமா?"

வந்தியத்தேவனுடைய கண்களில் தீப்பொறி பறந்தது. "யாரைச் சொல்லுகிறீர்கள்? ஜாக்கிரதை!" என்றான்.

"ஆகா! நான் ஜாக்கிரதையாகத்தான் இருக்கிறேன். அந்தப் பழையாறை மகாராணியைச் சொல்வதாக எண்ண வேண்டாம். அவள் உம்மைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டாள். தன் காலில் ஒட்டிய தூசிக்குச் சமாமாக உம்மை மதிப்பாள்.

உம்மை இலங்கையில் கொண்டு சேர்த்துத் திரும்பியும் அழைத்து வந்தாளே, அந்த ஓடக்காரப் பெண்ணைப்பற்றிக் கேட்கிறேன். பூங்குழலி உமது காதலி அல்லவா?"

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## தந்திரவாணன் செய்த தந்திரம்

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆட்சி செய்து கொண்டிருந்தான்.

அமைச்சர்கள், அதிகாரிகள், சேனாதிபதி முதலானோர் இருந்தனர்.

அந்த நாட்டில் தந்திரவாணன் என்பவன் ஒருவன் இருந்தான்.

குறுக்கு வழியில் திடீரென்று பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. ஆனால், மோசடி, கலப்படம், கடத்தல் முதலான வழிகளில் ஈடுபட அவன் விரும்பவில்லை. எதையுமே தந்திரமான வழிகளிலேயே செய்ய வேண்டும். என்பது அவன் நோக்கம்.

ஒரு நாள், மிகுந்த ஆடம்பரமான உடைகளை அணிந்து கொண்டான் தந்திரவாணன். நேராக அரண்மனைக்குச் சென்று அரசனை தனிமையில் கண்டு, தான் ஒரு இரத்தின வியாபாரி என்றும், பல நாட்டு அரசர்களைக் கண்டு வந்திருக்கிறேன் என்றும் கூறினான். இப்பொழுது இந்த நகரத்தில் தங்க உத்தேசித்திருக்கிறேன். தினமும் அரசசபை கூடும் முன் சில நிமிடங்கள் தங்களிடம் பேசுவதற்கு அனுமதி தரவேண்டும். அதற்காக ஐநூறு பவுன்கள் தங்களுக்குத் தந்து விடுகிறேன்" என்று வேண்டிக் கொண்டான் தந்திரவாணன்.

அவனுடைய உடை, பேச்சு ஆகியவற்றைப் பார்த்து, அவன் ஒரு பெரிய இரத்தின வியாபாரிதான் என்று நம்பினான் அரசன். அதோடு தினம் ஐநூறு பவுன் கிடைக்கும்போது அவனுக்குப் பேட்டி அளிப்பதில் தவறு ஏதும் இல்லை என்று சம்மதித்து விட்டான் அரசன்.

மறுநாள் தந்திரவாணன் ஆடம்பர உடையில் சபை கூடுமுன் வந்து, அரசனிடம் ரகசியமாக சில வார்த்தைகள் கூறிவிட்டுப் போய் விட்டான். அவன் கூறியது அரசனுக்குப் புரியவில்லை. ஆனால், தந்திரவாணன் சிரித்துக் கொண்டான்.

சபை கூடியது அமைச்சர்கள், பிரதானிகள், உயர் அதிகாரிகள் வந்து அவரவர் இருக்கையில் அமர்ந்தனர்.

மூன்றாம் நாள், தந்திரவாணன் வந்து, அரசனுடன் கிசுகிசு என்று பேசுகையில், ஒரு அமைச்சனை கூர்ந்து பார்த்துப் பேசினான். பிறகு, சிரித்தபடியே சென்றான், தந்திரவாணன் யார்? அரசனிடம் தினம் வந்து என்ன பேசிவிட்டுப் போகிறான் என்பது எவருக்குமே புரியவில்லை. ஆனால் அவன் ஒரு செல்வாக்குள்ள பெரிய மனிதன் என்று அனைவரும் நம்பினார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனதையும், புத்தியையும் அன்பு மற்றும் பரிவோடு ஆளத்தெரிந்தவர் பிறரை வழி நடத்தத் தகுதியானவர். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கை ஆட்சியாளர்கள் இனியாவது திருந்துவார்களா?

கனடா நாட்டின் பிரம்டன் நகரத்தில் அமைக்கப்பட்டுவரும், தமிழ் இனப் படுகொலை நினைவிடத்துக்கு இலங்கை அரசாங்கம் முன்வைத்த எதிர்ப்பை கனடா நாடு நிராகரித்திருப்பது அனைவரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

ஆம், கனடா பிரம்டன் நகரத்தில்; தமிழினப் படுகொலை நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்காக நினைவாலயம் அமைக்கப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் தனது எதிர்ப்பை முன்வைத்திருந்தது.

எனினும் பிரம்டன் நகர பிதா பேட்ரிக் பிரவுண் அந்த எதிர்ப்பை நிராகரித்துள்ளதுடன், இலங்கையின் நடவடிக்கை ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல எனப் பதிலளித்துள்ளார்.

கனேடிய நாட்டு வெளிவிவகார அமைச்சருக்கு அவர் அனுப்பி வைத்த பதிலில்; இது விடயத்தில் இலங்கைக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம் நகரபிதா பேட்ரிக் பிரவுண் எழுதிய கடிதத்தில்; இலங்கையில் தமிழ்ச் சமூகம் தங்கள் அன்புக்குரியவர்கள் மற்றும் மாவீரர்களை நினைவுகூருவதைத் தடுக்க இலங்கை அரசாங்கம் முயற்சி செய்யலாம். ஆனால் கனடாவில் அதைச் செய்ய முடியாது.

தவிர, கனடாவில் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்க முயல்வது உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யும் செயல் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆக, இங்குதான் இலங்கை அரசாங்கம் உலக அரங்கில் தலைகுனிந்து நிற்கிறது.

ஆம், நினைவேந்தல் என்பது அடிப்படை மனித உரிமை. அந்த அடிப்படை மனித உரிமை மீறலை இலங்கை அரசாங்கம் தமிழ் மக்கள் விடயத்தில் செய்து வருகிறது.

இஃது சர்வதேச ரீதியில் விமர்சனத்துக்குட்படுத்தக்கூடிய நிலையில், கனடா நாட்டின் பிரம்டன் நகரில் தமிழ் மக்கள் நினைவேந்தலுக்கான நினைவுத்தூபியை அமைப்பதை இலங்கை அரசாங்கம் தடுக்க முற்பட்டதன் மூலம், இந்த உலகில் இலங்கை ஆட்சியாளர்கள் மனிதநேயமற்றவர்கள் என்பதை நிரூபித்துள்ளனர்.

உண்மை. இந்த நாட்டில் நடந்த கொடும் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். அதிலும் வன்னிப் பெருநிலப்பரப்பில் திட்டமிட்ட தமிழினப் படுகொலை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு இலங்கை ஆட்சியாளர்கள் செய்த கொடுமைகள், வஞ்சிப்புகள் கொஞ்சமல்ல.

இருந்தும் போரில் கொல்லப்பட்ட தமது உறவுகளை நினைவேந்துவதைத் தடுப்பதற்கு இலங்கை அரசாங்கமும் படைத்தரப்பும் செய்து வரும் நிட்டூரம் சொல்லிமாளா.

இந்நிலையில், கனடா நாட்டில் நினைவிடம் அமைத்து அங்கேனும் தமது உறவுகளை நினைவேந்துவோம் என அங்குள்ள புலம்பெயர் தமிழ் மக்கள் நினைத்தால், அதனையும் தடை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிப்பது மிகக் கீழ்த்தரமான செயல் எனலாம்.

இங்குதான் பிரம்டன் நகரபிதா காத்திரமான பதிலை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கியுள்ளார்.

அவர் வழங்கிய பதிலாவது, கந்தறுந்து காவடி எடுக்கின்ற இலங்கை நாட்டின் ஆட்சியாளர்களைத் திருத்துமா என்று பார்க்கலாம்.

# தேர்தலைப் பிற்போட்ட ஜனாதிபதி ரணில் அடிப்படை உரிமையை மீறியுள்ளார்

## உயர்நீதிமன்றத் தீர்ப்பு சான்று – சஜித்

(மொறட்டுவ)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேர்தலை பிற்போட்டு நாட்டு மக்களின் அடிப்படை உரிமையை மீறியுள்ளாரென உயர்நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் ஒன்பதாவது மக்கள் வெற்றிப் பேரணி, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் மொறட்டுவை சொய்சாபுர விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றிருந்தது. இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த சஜித் பிரேமதாஸ,

ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் அவர்களின் சுய இலாபத்திற்காக வங்குரோத்து அடைந்த நாட்டிலிருந்து, தேசிய வளங்களையும் சொத்துக்களையும் முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றனர்.

நான் என்கின்ற மமதையுடன் ஆட்சி யுகம் ஒன்றை ஏற்படுத்தி, தனது அதிகாரத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக அதிகபட்ச தந்திரங்களை ரணில் பயன்படுத்தியுள்ளார்.

அரசியல் யாப்பு விதிமுறைகளை மீறி, நிறைவேற்று அதிகாரத்தை தான்தோன்றித்தனமாக பயன்படுத்தியுள்ளார்.

எனவே இந்த இருண்ட யுகத்தைத் தோல்வி அடையச்செய்து, பொது மக்களுக்கான புதிய யுகத்தை நோக்கிச் செல்வதற்கு ஒன்றிணையுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

தற்போது இந்த அரசியலில் தலைவர்கள் இடம் மாறிக் கொண்டிருக்கின்றன. பணத்துக்காகவும் தரகுத் தொகைகளுக்காகவும் சலுகைகளுக்காகவும் வரப்பிரசாதங்களுக்காகவும் மதுபான சாலைக்கான உரிமத்திற்காகவும் தமது சுய கௌரவத்தை இழக்கின்ற ஓர் அரசியல் கலாசாரம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

நான் எடுத்த தீர்மானம் சரியானது என்று இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் உட்பட ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் வழங்கிய தீர்ப்பு எதைக் குறிக்கின்றது.

இந்த தன்னிச்சையான தான்தோன்றித்தனமான தீர்மானத்திற்கு ஜனாதிபதியே பொறுப்புக்கூற வேண்டும்.

நிதி அமைச்சராக அவர் மக்களின் அடிப்படை உரிமையை மீறியிருப்பதாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது என சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார். (ந-7)

# தமது சொந்த நலனுக்காக சிலர் பொது வேட்பாளரை எதிர்க்கின்றனர்

## சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு

பாராளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சாணக்கியன் மற்றும் அவைத் தலைவர் சிவஞானம் போன்ற சிலர் தனிப்பட்ட காரணங்களுக்காகப் பொது வேட்பாளரை எதிர்ப்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் பொது வேட்பாளருக்கு ஆதரவாகப்பிரசாரத்தை ஆரம்பித்து வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தமிழரசுக் கட்சியில் பெரும்பாலானவர்கள் ஆதரவாக இருக்கின்றார்கள்.

சுமந்திரன், சாணக்கியன், சிவஞானம் போன்ற சிலரைத் தவிர தமிழரசுக் கட்சியின் ஏனைய மேல் மட்டங்களும் சரி, ஏனைய கட்சியின் கீழ் மட்டத் தொண்டர்களும்சரி பொது வேட்பாளர் வெற்றி பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

கிளிநொச்சியைச் சேர்ந்த சிறீதரனும் பொது வேட்பாளரை வாழ்த்தியிருக்கிறார். ஏற்கனவே அதற்கான கூட்டங்களும் கிளிநொச்சியில் கூடப்பட்டிருக்கிறது.

அதேபோல தலைவராக இருக்கின்ற சேனாதிராஜாவும் இதனை வரவேற்றிருக்கின்றார். ஆகவே தமிழரசுக் கட்சியினுடைய பெரும்பான்மையானோர் இதனை ஆதரித்து வரவேற்றிருக்கிறார்கள். ஒரு சிலர் தங்களுடைய சொந்தக் காரணங்களுக்காக எதிர்க்கின்றனர்.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக முடிவு எடுப்பார்களாக இருந்தால், அது தமிழ்த் தேசியத்துக்கு எதிரான முடிவாகத்தான் இருக்கும்.

தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கட்சிகளும், சிவில் அமைப்புக்களுமாக ஒன்றாக இணைந்து தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தியிருக்கிறார்கள்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்காமல் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை விளக்கும் வகையிலும் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் வாக்களிப்பதன் ஊடாகவுமே தென்னிலங்கையின் வேட்பாளர்களுக்குத் தெளிவுபடுத்த முடியும்.

எங்களுக்கு இருக்கக்கூடிய ஜனநாயகத் தளம் என்பது இந்த ஜனாதிபதித் தேர்தலேயாகும். அந்தக் களத்தைப் பயன்படுத்தி ஒட்டுமொத்த வட கிழக்கு தமிழர்களும் இணைந்து இந்தச் செய்தியை சொல்ல வேண்டும் என விரும்புகின்றோம் என சுரேஸ் பிரேமச்சந்திரன் மேலும் தெரிவித்தார். (ந-7)

# வாகன விபத்தில் ஒருவர் மரணம்

(பிலியந்தலை)

பிலியந்தலைப்பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மத்தேகொடை - கொட்டாவை வீதியில் நான்கு வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப்பிலியந்தலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது லொறியின் சாரதி படுகாயமடைந்துள்ள நிலையில் ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பன்னிப்பிட்டியப்பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ந-7)

# பிரதமரைச் சந்தித்தார் முன்னாள் எம்.பி சந்திரகுமார்

(கொழும்பு)

பிரதமர் தினேஸ் குணவர்த்தனவை சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சந்திரகுமார் கொழும்பில் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பின்போது இனங்களுக்கிடையில் நம்பிக்கையையும் பரஸ்பரத்தன்மையையும் சம உரிமையையும் கொண்ட அரசியல் தீர்வின் அவசியம் பற்றியும் சமகால நிலைவரங்கள் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் பற்றியும் கலந்துரையாடப்பட்டன என சமத்துவக் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதன்போது தமிழ் மக்களின் அரசியல் மற்றும் அன்றாடப் பிரச்சினைகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் என்பன அடங்கிய மகஜரும் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோற்றுக் கொண்டிருக்கும் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகளும் தோற்காத அரசியல் தீர்வு யோசனைகளும்


**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.


**06**

இந்த ஒப்பந்தம் இலங்கை ஒரு பல்லின, பல்மத, பல்மொழி நாடாக ஏற்று வடகிழக்கை தமிழ் முஸ்லீம் மக்களின் இணைந்த தாயகப் பிரதேசமாக ஏற்று தமிழ் மொழியை அரச மொழியாக ஏற்று மாகாண சபைகளுடான அதிகாரப் பரவலாக்கத்தை முன்வைக்கின்றது.

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பின்வரும் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

1. இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பேணிக்காக்க விரும்பி,

2. இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் ஆகியோரைக் கொண்ட பல்லின, பன்மொழி சமூகங்கள் வாழும் நாடு என்பதை உணர்ந்து,

3. மிகக் கவனமாகப் பேணிக் காப்பாற்ற வேண்டிய தனித்தனிக் கலாசாரம், மொழி அடையாளங்களை ஒவ்வொரு இனமும் கொண்டுள்ளதென்பதையும்,

4. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அங்கு ஏனைய இனக்குழுக்களுடன் எல்லாக் காலத்திலும் ஒன்றாக வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுப்பூர்வமான வசிப்பிடங்கள் என்பதையும் அங்கீகரித்து,

5. இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகிய அம்சங்களைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த சகல பிரஜைகளும் சமத்துவமாகவும், பாதுகாப்பாகவும், ஒற்றுமையாகவும் சுபீட்சத்துடன் தங்கள் அபிலாசைகளை நிறைவேற்றி வாழும் பல இன, பல மொழி பேசும் பல மதங்களைக் கடைப்பிடிக்கும் தன்மையைப் பேணி,

பின்வரும் உடன்பாட்டிற்கு வருகிறோம்:

1. இலங்கை அரசாங்கம் அருகருகுள்ள மாகாணங்களை ஒரு நிர்வாக அலகாகச் சேர்த்துக் கொள்ளக்கருதும் கீழ் விவரிக்கப்பட்டவாறு வடக்கு, கிழக்கு என்று அவற்றைப் பிரிக்கும் பட்சத்தில் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவது என்றும்,

2. மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் திகதியில் இருந்து 3இல் தெரிவிக்கப்பட்டவாறு சர்வஜன வாக்குரிமை நடத்தும் திகதி வரையான காலப்பகுதி இடைக் காலப்பகுதியென்று கருதப்படும். 8ஆம் வாசகத்திற்கு அமைய சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் வரை தற்போதுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரு மாகாண சபையை உள்ளடக்கிய ஒரு நிர்வாக அலகாக இருக்கும். இத்தகைய அலகில் ஓர் ஆளுநர், ஒரு முதலமைச்சர், ஓர் அமைச்சரவை ஆகியன செயற்படும்.

இந்த ஒப்பந்தத்தால் வந்தது தான் இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாண சபைகள் சட்டம். 1987, நவம்பர் மாதம் இந்த சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. 1988இல், ஜெயவர்த்தன, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை ஒரு அலகாக இணைப்பதாக அறிவித்தார். 1988 நவம்பர் மாதத்தில் இணைந்த வடகிழக்கு மாகாணத்திற்கான தேர்தல் இடம் பெற்றது.

விடுதலைப் புலிகள் இயக்கம் இதனை ஏற்றுக்கொள்ளாத நிலையிலும், அப்போதிருந்த தமிழர் விடுதலை கூட்டணி தேர்தலில் போட்டியிட மறுத்திருந்த நிலையிலும் தான், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, ஆகியவை தேர்தலில் போட்டியிட்டிருந்தன.

1988 டிசம்பரில், அண்ணாமலை வரதராஜப் பெருமாள் இணைந்த வடகிழக்கு மாகாணத்தின் முதல் முதலமைச்சரானார். பிரேமதாஸ-விடுதலைப் புலிகள் உடன்பாட்டை தொடர்ந்து, 1990 மார்ச்சில், இந்திய அமைதிப் படைகள் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையில், மாகாண சபை செயலிழந்தது. இந்திய படைகள் இலங்கையில் தொடர்ந்தும் நிலைகொண்டிருந்தால், மாகாண சபை செயலழிந்திருக்காது. இந்திய படைகளை நம்பித்தான், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, மாகாண சபையை பொறுப்பேற்றிருந்தது.

மாகாண சபை செயலிழந்த பின்னர் - மாகாண சபையை பலப்படுத்துவது, அதன் அதிகாரங்களை உச்சளவில் பயன்படுத்துவது தொடர்பில் தமிழ் அரசியல் பரப்பில் எவரும் பேசவில்லை. ஏன்? ஏனென்றால், விடுதலைப் புலிகள் தலைமையில் ஆயுதப் போராட்டம் தொடர்ந்து கொண்டிருந்தது.

சட்டமியற்றுதல் நிறைவேற்றுதல் மற்றும் நிதி அதிகாரங்களை உள்ளடக்கி அவற்றை மாகாண சபைகள் பயன்படுத்தக்கூடியவாறு அப்போதைய பகிர்ந்தளிப்பதற்கான மாகாண அமைப்பு அரசியலைமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தால் உருவாக்கப்பட்டது.

இத் திருத்தத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பிரிவு 154 G (I) ஆனது மாகாண சபைகளில் ஒன்பதாவது அட்டவணையின் பட்டியல் I (மாகாண சபை பட்டியல்) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக மாகாண சபை சட்டவாக்க அதிகாரத்தை கொண்டுள்ளது.

154C பிரிவு ஒரு மாகாணத்திற்குள் ஆளுநரின் நிறைவேற்று அதிகாரத்தை பட்டியல் I இல் உள்ள விடயங்கள் வரை விரிவுபடுத்துகிறது. இவ் அதிகாரம் அமைச்சரவையின் ஆலோசனையின் பேரில் 154 F(I) பிரிவின்படி பயன்படுத்தப்பட வேண்டும். பிரிவு 154 F(6) இன்படி, அமைச்சர்கள் குழு கூட்டாக மாகாண சபைக்கு பொறுப்பும் மற்றும் பதிலும் அளிக்க வேண்டும்.

இந்த இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தம் இன்று பல திறனாய்வுக்கு உள்ளாகிக்கொண்டிருக்கிறது.

13ஆவது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தின் விமர்சனங்கள் "இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தை இரத்துச் செய்ய வேண்டும்" என்று கோஷம் எழுப்பும் இனவாதிகள். "13ஆவது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தை அமுல்படுத்தினாலே தமிழர்களுக்கு சம உரிமை கிடைத்து விடும்" என்று வாதிடும் சில அரசியல்வாதிகள்.

"இந்த வலுவற்ற 13ஆவது அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தத்தில் இலங்கை பாராளுமன்றம் எந்த மாற்றங்களையும் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு கொண்டு வந்து மாற்றிக் கொள்ள முடியும். இலங்கை பாராளுமன்றத்தில் ஒரு வாக்கு அதிகம் பெற்று கூட இந்தத் திருத்தங்களை மாற்றி அமைத்துக் கொள்ளலாம்" என்று கூறும் சட்டவல்லுநர்கள்.

"மக்களுக்கு அதிகமான அளவில் அரசில் பங்களிப்பை வழங்கும் மாகாண சபைகள் முறைகள் நீக்கப்படக் கூடாது" என்றும் சொல்லும் அரசியல் ஆய்வாளர்கள். "13ஆவது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு முழு அரசியல் தீர்வாக அமையாது" என்று கருத்துக் கூறிய காலஞ் சென்ற தி.மு.க. தலைவர் கருணாநிதி.

"1987ஆம் ஆண்டு ராஜீவ் காந்தியும், ஜெயவர்த்தனாவும் இணைந்து திணித்த 13ஆவது அரசியலமைப்பு சட்டத் திருத்தம் ஈழத் தமிழினத்திற்கு எந்தத் தீர்வையும் தராது" என்ற புலிகளின் அன்றைய நிலைப்பாடு.

"தமிழர் இதுவரை மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளில் இருந்தும் வெகு தூரத்திற்கு அப்பால் இந்திய-இலங்கை ஒப்பந்தம் சென்றுள்ளது. அது முதல் தடவையாக தமிழர்களின் ஏறக்குறைய ஒவ்வொரு தனித்தனி பிரச்சினையும் ஆராய்ந்து அப் பிரச்சினைகளுக்கு பதில்களைக் கண்டு, கையெழுத்திடப்பட்ட ஓர் உடன்படிக்கையாகும்." என்று பெருமிதம் அடைந்த காலஞ் சென்ற பிரதமர் ராஜிவ் காந்தி. இவ்வாறு 13ஆம் திருத்தம் நாளாந்தம் திறனாய்வுக்கு உட்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

இதில் எது சரி எது பிழை. அதிகாரம் மாகாணசபைகளிற்கு உள்ளதா? இல்லையா? இது தொடர்பாக நீதிமன்றங்களின் வெவ்வேறான வியாக்கியானங்கள். ஒவ்வொரு வியாக்கியானத்தையும் வைத்து அது சரியென தர்க்கிக்கும் சட்டவல்லுநர்கள். பிரச்சினைகளை நீதிமன்றம் எடுத்துச் சென்றால் வெற்றி கிடைக்குமா என்ற தமிழ் அரசில்வாதிகளின் சந்தேகங்கள்,

நீதி மன்றத் தீர்ப்புக் கிடைக்க எடுக்கும் கால தாமதங்கள். மாகாணசபைகளிற்கான அதிகாரங்கள் என்னவென்பதில் தமிழ் அரசில்வாதிகளிற்கிடையே கருத்து ஒற்றுமையின்மை. இவ்வாறு 13ஆவது திருத்தம் பற்றி கூறிக் கொண்டே போகலாம்.

13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது வழங்கப்படவில்லை என்ற வாதப் பிரதிவாதங்களுக்கு மத்தியில் நாம் நமது திறனாய்வைச் செய்து கொண்டு நகர்ந்து கொண்டிருக்கிறோம்.

13ஆவது திருத்தம் மாகாணங்களுக்கு விவசாயம், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, உள்ளூராட்சி, திட்டமிடல், வீதிப்போக்குவரத்து மற்றும் சமூக சேவைகளில் சட்டவாக்க அதிகாரத்தை கொடுத்த போதிலும் பல பொருள்படக்கூடியதாக அமைந்திருக்கும் பொதுப்பட்டியல் மற்றும் அரசியலமைப்பின் விஞ்சிய மதிப்புடைய சில பிரிவுகள் காரணமாக மத்திய அரசாங்கமே மிகவும் பலம்பொருந்தியதாக இருக்கிறது போலத் தோன்றுகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலஞ்ச ஊழல்...

வருமானம் பெறும் வேட்பாளராகத் திலித் ஜயவீரவும், குறைந்த மாத வருமானம் கொண்ட வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த ஆணைக்குழு வெளியிட்டுள்ள தகவலுக்கமைய, மௌபிம ஜனதா கட்சியில் இருந்து இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வர்த்தகர் திலித் ஜயவீரவின் மாத வருமானம் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது அதிகூடிய, மாதாந்த வருமானம் சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ எனவும் அவரது மாத வருமானம் 13 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது இடத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் மாதாந்த வருமானம் 4 இலட்சத்து 54 ஆயிரத்து 285 ரூபாய் என்றும், ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ 2 இலட்சத்து 85ஆயிரத்து 681 ரூபாய் மாதாந்த வருமானத்துடன் ஐந்தாவது இடத்தில் காணப்படுகிறார் என்றும் கூறப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்கவின் மாத வருமானம் 2 இலட்சத்து 56 ஆயிரத்து 802 ரூபாய் என்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் மாத வருமானம் 3 இலட்சத்து 17 ஆயிரத்து 786 ரூபாய் என்றும் மக்கள் போராட்டக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவான் போபகேயின் மாத வருமானம் 3 இலட்சம் ரூபாய் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மாதாந்த வருமானம் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## பிரசாரக்...

நேற்று வெள்ளிக்கிழமை பொலிகண்டியில் ஆரம்பமாகியது.

பொலிகண்டி ஆலடிப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணிக்கு தேர்தல் பரப்புரை ஆரம்பிக்கப்பட்டது. ஆலடிப் பகுதியில் கூடியிருந்த பொதுமக்களுக்கும் வீதியால் பயணித்த பொதுமக்களுக்கும் பொதுவேட்பாளருக்கு ஆதரவான துண்டுப்பிரசுரங்களை வழங்கி ஆதரவு கோரப்பட்டது.

அங்கிருந்து பொலிகண்டிப் பகுதியில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்கும் என மக்கள் பேரெழுச்சிப் பேரணி நிறைவை முன்னிட்டு நாட்டப்பட்ட நினைவுக்கல் பகுதிக்குச் சென்று அங்கிருந்தவர்களுக்கும் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து வல்வெட்டித்துறை-தொண்டைமானாறு - செல்வச்சந்நிதி ஆலயம் - பலாலி, மயிலிட்டி - காங்கேசன்துறை ஆகிய பகுதிகளுக்குச் சென்று துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டு பரப்புரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேந்திரன், தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பைச் சேர்ந்த ம.நிலாந்தன், கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சியினர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். பொது வேட்பாளருக்கு சந்நிதி முருகன் ஆலயத்தில் தாய் ஒருவர் திலகமிட்டு வாழ்த்தி வைத்தார். (ம-7,60)

## வவுனியாவில்...

இறந்த சிசுவின் உடலை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று மருத்துவப் பரிசோதனை செய்வதற்கு ஏற்பட்ட இழுபறி நிலைமை தொடர்பில் பொலிஸார் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் மூலமாகத் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட சிசுவின் சார்பில் நான் நேற்றைய தினம் ஆஜராகி சிசுவின் சடலத்தை மருத்துவப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமை தொடர்பில் கௌரவ மன்றுக்குத் தெளிவுபடுத்தியிருந்தேன்.

கௌரவ மன்று குறித்த விசாரணையில் மிகவும் உன்னிப்பாகவும் அவதானத்துடனும் செயற்பட்டு குறித்த சிசுவின் உடலை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு உரிய ஒழுங்குகளை மேற் கொள்ளுமாறு கூறியதன் பிரகாரம் வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் அன்ரன் புனிதநாயகம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக ஒழுங்குபடுத்தித் தந்திருந்தார்.

அதன் பிரகாரம், மன்றானது குறித்த சிசுவின் மரண விசாரணையைச் செய்யுமாறும் அதனுடைய அறிக்கையினை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நான்காம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் மன்று பொலிஸாருக்குக் கட்டளையிட்டுள்ளது.

மேலும், இந்த மருத்துவ அறிக்கையில் திருப்தியின்மை காணப்படுமாக இருந்தால், மேலதிக மருத்துவப் பரிசோதனை தொடர்பாக வேறு இடங்களுக்கு மாற்றம் செய்து மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும் என்பது தொடர்பிலும் மன்று உத்தரவாதம் வழங்கியுள்ளது என்றார். (ந-7)

## யுக்தியவை...

மனித உரிமைகள் நிலை குறித்த அறிக்கையில் இது குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தேசபந்து தென்னக்கோன் பொலிஸ் மா அதிபராகவிருந்த காலத்தில் மேற்கொண்ட போதைப்பொருள் எதிர்ப்பு "நீதி நடவடிக்கை" (யுக்திய) இடைநிறுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், இந்த ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி ஐ.நா நிபுணர்கள் குழு ஓர் அறிக்கையை வெளியிட்டது.

அவ்வறிக்கையிலும் யுக்திய நடவடிக்கையை இடைநிறுத்துவதற்கும் குறித்த செயற்பாட்டை மறுபரிசீலனை செய்வதற்கும், அடிமையானவர்களைக் கையாள்வதில் சுகாதாரம் மற்றும் மனித உரிமைகள் அடிப்படையிலான கொள்கைகளில் கவனம் செலுத்துவதற்கும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் திரன் அலஸ், ஏப்ரல் மாதம் பொலிஸாருக்கு வழங்கிய உத்தரவு குறித்தும் ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் விசேட கவனம் செலுத்தியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## கட்டட...

நித்திரைக்குச் சென்றிருந்தார். மற்றவர் வேலை செய்து கொண்டிருந்ததாகவும் அதிகாலை எழுந்து மற்றவரைக் காணாது தேடியபோது அவர் சடலமாகக் கீழே காணப்பட்டார் எனப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த சம்பவத்தில் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 34 வயதுடைய சின்னாண்டி பரமேஸ்வரன் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார். (ந-7,316)


மஹஜன சம்பத
திகதி 2024.08.23
சீட்டிழுப்பு இலக்கம் 5574
E 3 9 9 0 8 4
அத சம்பத
E 9 0 8 4
சீட்டிழுப்பு இலக்கம் 0149
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.08.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1604
V 37 56 67 71 V
Double Chance 72334

மெகா பவர்
திகதி 23/08/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1922
H 12 25 51 55 75
84411

லக்கி 7 VIP
திகதி 2024.08.23
சீட்டிழுப்பு இலக்கம் 0400
H 6 6 3 5 4 5 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3816
சீட்டிழுப்பு திகதி 23.08.2024
D 02 16 45 66
D 31558

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.08.23
சீட்டிழுப்பு இலக்கம் 0883
கடகம் 32 35 37 49 கடகம்
01655 29

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.08.2024 வெற்றி வாரம் 282 இள இளஞ்சிவப்பு
ஆங்கில எழுத்து G
7 7 9 1 2 3
48631
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,613,948.00
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 10 04 49 61 65
சுப்பர் இலக்கம்
1724
இள கபில
23.08.2024
வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 540,645,099.40
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4260 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.08.23 தினம் வெள்ளிக்கிழமை
03 36 52 53
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,436,261.20
114390
DLB

சசிரி
வெற்றி வாரம் 519
சீட்டிழுப்பு திகதி 2024.08.23
பச்சை
08 31 45
07
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,770,640/-
DLB

சனிதா
திகதி 2024.08.23 வெற்றி வாரம் 4709 வர்ணம் செம்மஞ்சள்
07 19 51 57 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,113,610.40
63125
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2548 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 23.08.2024 தினம் வெள்ளி
11 37 42 62 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,542,058.40
DLB

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2374
சீட்டிழுப்பு திகதி : 2024.08.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,004,690.40
அட கோடிபதி ADA KOTIPATHI
10 21 37 49 Z
754009
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கின் செல்லக் குரலுக்கான தேடல்

எமது நிகழ்ச்சியின் குரல் தேர்வு நிறைவு பெற்ற நிலையில், இதுவரை 5 மாவட்டங்களில் இருந்தும் பங்கேற்க முடியாத போட்டியாளர்களுக்கு

**இறுதிச் சந்தர்ப்பம்!**

**24.08.2024 - சனிக்கிழமை அன்று நேரடியாக**

யாழ்ப்பாணம், பிரதான வீதி (Main Street)
கலைத் தூது மண்டபத்தில் (திருமறைக் கலாமன்றம்)
குரல் தேர்வுகள் காலை 9.30 முதல் ஆரம்பம்

(283)


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டொன்று சென்றதுவோ
ஆற்றாமையால் தவிக்கின்றேன்
அன்பு முகம் காணாமல் கண்ணீரில் கரைகின்றேன்
அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து
பக்குமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய்
ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
துன்புற்றோர் துயர் துடைத்து
துணைக்கரமாய் அடைக்கலம் தந்த உம்மை
ஆண்டவன் ஏன் அழைத்தான்
பண்புள்ளோரை பல காலம்
வாழ விடக்கூடாது என்றோ?
நல்லவர் பெயர் விளங்கும் அவனியிலே
அன்பானவரே உம் பெயரும் விளங்கும்
அமைதியில் துயிலும் தங்கள் ஆத்மா
சாந்தியடைய கரம் கூப்பி நிற்கின்றேன்.

அமரர்
**இராசேந்திரம் நிக்சன்**
(அதிபர் மு/கல்விளான்குளம் மகா வித்தியாலயம்,
அகில இலங்கை சமாதான நீதவான் Jp)

தோற்றம் 1975.10.09 — மறைவு 2023.09.04

திதி – தேய்பிறை பஞ்சமி (24.08.2024)

**மனைவி**


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 240 நிலப்பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**




- 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீர் ஊற்று, 20 அடிப் பாதை
- குடியிருப்புகள் சூழ உள்ள பகுதி
- நுச்சியம்பதி பிள்ளையார் கோவில் அருகாமையில்
- வட்டுக்கோட்டை Jaffna கல்லூரி 1 Km தூரம்
- காரைநகர் - யாழ்ப்பாணம் பிரதான காபெற் வீதி 500m தூரம், 784 வழி அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வழி
- 1 பரப்பின் விலை 150,000/= (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(1754)

**குரு**
077 294 1521
077 288 0152
076 755 8616


## கலந்துரை...

பதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக, எந்த ஒரு வேட்பாளரினாலும் தனித்து சிங்களவர்களின் வாக்குகளால் மட்டும் ஆட்சி பீடம் ஏறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெறும் வேட்பாளருக்கே இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் ஒன்பதாவது ஜனாதிபதியாகும் வாய்ப்புக்கிட்டவுள்ளது.

இதனடிப்படையிலேயே தமக்கான ஆதரவினைப் பெறும் நோக்கில் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேந்திரனைக் கலந்துரையாடலுக்கு வருமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

இதற்கு முன்னரும் ஜனாதிபதி மேற்போன்ற அழைப்பை விடுத்த போதிலும் தமிழர் தரப்பால் அது நிராக ரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## யாழ். போதனாவில் $0^+$ குருதிக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை இரத்த வங்கியில் O+ இரத்த வகைக்கு தட்டுப்பாடு நிலவுவதாக இரத்த வங்கிப் பிரிவினர் தெரி வித்துள்ளனர்.

எனவே, இந்த வகைக் குருதியை உடையவர்கள் யாழ் ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு நேரடியாக வருகை தந்து குருதிக் கொடை வழங்கி உயிர்காக்கும் பணிக்கு ஒத்து ழைப்பு வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக தகவல்களுக்கு 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன்தொடர்பு கொள்ளுமாறும் யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையின் இரத்தவங்கிப் பிரிவினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.(ந-7)


## WIN REPAIR

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள். உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம்.

தொடர்புகளுக்கு: 076 834 6136

(1770)

## காணி விற்பனைக்கு

சேந்தான்குளம் இளவாலை வீதியில், சேந்தான்குளம் சந்தியில் இருந்து 200m தூரத்திலும், பிரதான வீதியில் இருந்து 150m தூரத்திலும்,

- 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- தரகர் தேவையில்லை.
- ஒரு பரப்பின் விலை :- 600,000/-

(1764)

077 368 4579, 077 148 9278

## மொத்தக் கொள்வனவு



400g அங்கர் பால்மா மற்றும் யோக்கட் மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்

**Happy Super market**
உரும்பிராய்
077 773 0900

(282)

## இந்தியன் விசா சேவைகள்

யாழ்ப்பாணம் – சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண சீட்டுக்களினை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(282)

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)



CIMS College
49A, Chapel Street, Jaffna.

(C-1037)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## V2 VISA SERVICES

**கனடா**
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1037)

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 235/= |
| 1 Kg Prima கோதுமை மா | - 159/= |
| 1 Kg றவை | - 282/= |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 269/= |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 390/= |
| 1 Kg தீட்டல் பச்சை | - 205/= |
| 1 Kg பொன்னி அரிசி | - 274/= |
| 1Kg கீரி சம்பா | - 240/= |
| 1Kg சம்பா | - 228/= |
| 1Kg செத்தல் மிளகாய் | - 740/= |
| 1 L மரக்கறி எண்ணெய் | - 620/= |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= |
| 01 Ocean மீன் ரின் | - 360/= |
| 180 ml சன்சில்க் சம்போ | - 430/= |
| 400 g சஸ்ரயன் | - 3390/= ~~3900/=~~ |
| 400 g அங்கர் | - 1000/= |

400g Anchor
1000/=



~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

... வீதி, உரும்பிராய் சந்தி.

(282)

Happy Supermarket
0777 8080 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.